பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 18 சனிக்கிழமை 01.05.2021 கதிர் 177

**இனி து ரகசியம் அல்ல!**

நேற்று அதிகாலை விடியும் வேளையில் தமிழர் தரப்பில் அதிகம் பேசப்பட்ட விடயம் சுமந்திரன் எம்.பி. பயணம்செய்த அவரின்வாகனம் அதிவேகப் பாதையில் விபத்துக்குள்ளான விவகாரம்தான்.

வந்த வேகத்தில் அவரின் வாகனம் 'ஸ்லிப்' பண்ணி,

02

# மிரட்டும் 'புத்தாண்டுக் கொத்தணி' நேற்றும் 1,662 பேருக்குத் தொற்று

## ஒரே நாளில் அதிகளவிலானோர் கொரோனாவுடன் அடையாளம்

இலங்கையில் நேற்று மாத்திரம் 1,662 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

'புத்தாண்டுக் கொத்தணி'யில் நாட்டில் ஒரு நாளில் அதிக எண்ணிக் கையான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 146 ஆக எகிறியுள்ளது.

02

## மேலும் 11 பேர் மரணம் கொரோனாச் சாவு 678

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

பிலியந்தலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயது பெண், தெஹியத்தகண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயது ஆண், மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயது பெண், களுத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயது பெண்,

02

## மேலும் சில பிரதேசங்கள் முடக்கம்!



கொரோனாத் தொற்றுப் பரவலால் களுத்துறை மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் சில பிரதேசங்கள் நேற்று மாலை முதல் முடக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி களுத்துறை மாவட்டத்தில் பதுரலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்துன்ன, இங்குருதலுவ, மிந்தலன, மோரபிடிய, பெலேந்த, ஹெடிகல்ல மற்றும் மோரபிடிய வடக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

02

## உயிர்களைப் பாதுகாக்க அனைத்து வைபவங்களையும் ஒத்திவையுங்கள்

### இந்துமதத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

சகல வைபவங்களையும் ஒத்திவைத்து உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழையுங்கள் என்று நல்லை ஆதீனம் வலியுறுத்தியுள்ளது.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,

02

## யாழில் 29 பேர் உட்பட வடக்கில் 36 பேருக்கு கொரோனா உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 29 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 36 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி

02

## P2P வழக்கை முடிவுறுத்தியது கல்முனை நீதிவான் நீதிமன்றம்



(ந.லோகதயாளன்)

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியாகச் சென்றமை தொடர்பாக மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள்

11

## தேசிய வெசாக் நிகழ்வு கட்டுமட்டாக நடக்கும்

(ந.லோகதயாளன்)

கொரோனா நிலைமைய அனுசரித்தே தேசிய வெசாக் உற்சவத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை

02

## முல்லைத்தீவில் 13 கிராம சேவையாளர் பிரிவுகள் மகாவலி அதிகார சபையின் கீழ் இயங்க அனுமதி

### சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பகுதி பறிபோகும் அபாயம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 01

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் 13 கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அதிகார சபைக்கு உட்பட்டுச் செயல்பட ஏற்பாடு செய்யுங்கள் என அதிகார சபை வடக்கு ஆளுநரிடம்

02

## சுமந்திரன் எம்.பி. பயணித்த வாகனம் அதிவேக வீதியில் அதிகாலை விபத்து

### காயங்கள் எதுவுமின்றி மயிரிழையில் அவர் தப்பினார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பயணித்த

11




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்தது மூன்று தரம் சுழன்று (Spin பண்ணி) வட்டமிட்டிருக்கின்றது. அதன் பின்னர்தான் அது கரையோரப் பாதுகாப்புத் தடுப்புகளுடன் மோதியிருக்கின்றது.

தம்முடைய வாகனம் மூன்று, நான்கு தடவைகள் வேகமாக சுழன்றமையைத் தான் உணர்ந்தார் என என்கின்றார் அச்சமயம் அரைத் தூக்கத்தில் இருந்த சுமந்திரன்.

அவருடைய வாகனம் ஸ்லிப் பண்ணி சுழன்ற இடத்துக்கு சரியாக ஒரு சில மீற்றர் தொலைவில், அந்த விபத்து நடந்து இரண்டு நிமிடங்களில், அடுத்த விபத்து. அதுவும் அதே மாதிரி ஸ்லிப் பண்ணி சுழன்று தடுப்புக்களுடன் மோதிய விபத்து. அந்த விபத்தில் சிக்கியது ஒரு சிறிய கார்.

விபத்து நடந்ததும் விரைந்து வந்த பொலிஸார், விபத்தில் சிக்கிய வாகனங்களை நகர்த்த விடாமல் தடுத்தனர். தடுப்புகளுக்கும் அதிவேகப் பாதைக்கும் ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிட்டு அத்தொகையைச் செலுத்திய பின்னர்தான் வாகனத்தை அங்கிருந்து நகர்த்த முடியும். அதுதான் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விதிமுறை வழிகாட்டி என்று உடும்புப் பிடியாக நின்றனர் பொலிஸார். காலையில் விடிந்த பின்னர் அதிகாரிகள் வந்து, பாதிப்பைக் கணக்கிட்டு, முடிவு செய்து, அதனை செலுத்திய பின்னர் புறப்படுவது என்றால், தாம் செல்ல வேண்டிய கல்முனை நீதிவான் நீதிமன்றை வழக்கு நேரத்துக்கு சென்றடைய முடியாது என்று கண்ட சுமந்திரன், தம்மை அறிமுகப்படுத்தி, உரிய நஷ்ட ஈட்டைத் தாம் செலுத்துவார் என உறுதியளித்து, தங்களை மேற்கொண்டு செல்ல அனுமதிக்கும்படி வேண்டினார். இருந்த போதும் இணக்க நிலை வரவில்லை. அப்பகுதியின் பெருவீதிகளுக்குப் பொறுப்பான பொறியிலாளரான பெண் அதிகாரி ஒருவரின் தொகைபேசி இலக்கத்தை பொலிஸார் வழங்கினர். அவரோடும் தொடர்பு கொண்டு பேசினார் சுமந்திரன். விடயம் சரிவரவில்லை.

வேறு வழியின்றி பெருந்தெருக்களுக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் தொடர்பு கொள்ள முயன்றார் சுமந்திரன். விடியும் வேளை அதுவும் உடனடியாகச் சாத்தியமாகவில்லை.

அச்சமயத்தில் சுமந்திரனுக்கு நெருக்கமான தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் விடயத்தைக் கேள்விப்பட்டு சுமந்திரனுக்கு அழைப்பு எடுத்து விசாரித்தார். சுமந்திரன் நடந்த விடயத்தைக் கூறினார். தாம் அமைச்சர் ஜோன்ஸ்டனைத் தொடர்பு கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கின்றார் என விபத்து நடந்த இடத்திலிருந்து தெரிவித்தார்.

உடனடியாக அந்தப் பத்திரிகையாளர் விடியும் அச்சமயத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு எடுத்தார். காலை வணக்கங்களைக் கூறிய பத்திரிகையாளர் உடனடியாகவே சுமந்திரனின் விபத்துப் பற்றிய தகவலை பிரதமருக்குச் சொன்னார். சுமந்திரன் விபத்தில் என்று முதலில் கேட்டதும் பதறியடித்த பிரதமர், சுமந்திரனுக்குப் பாதிப்பில்லை என்றதும் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, பத்திரிகையாளரையே அந்த அழைப்பை சுமந்திரனுடன் இணைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதற்கிடையில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு விடயத்தை எட்டவைத்திருந்தார் சுமந்திரன். எனினும் சுமந்திரனின் தொலைபேசி தொடர்ந்து 'என்கேஜ்ட்' ஆக இருந்தது. சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் சுமந்திரனை லைனில் பிடிப்பதற்குத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தார். பிரதமரும் அந்தக் காலை வேளையில் பொறுமையாக தொடர்பில் காத்திருந்தார். சற்று நேரத்தில் சுமந்திரனின் கைத்தொலைபேசி இணைப்புக் கிடைத்தது.

பத்திரிகையாளர், மறுமுனையில் பிரதமர் காத்திருக்கும் செய்தியை சுமந்திரனுக்குச் சொன்னார். இருவரும் உரையாடினர்.

"கவனம் சுமந்திரன். அங்கு மினக்கெட வேண்டாம். உடனே புறப்படுங்கள். நஷ்ட ஈடு செலுத்துவது குறித்துப் பிறகு பார்க்கலாம். யாரேனும் அதிகாரிகள் மறித்தால் பிரதமரின் பணிப்பு என்று சொல்லுங்கள். கவனமாகப் போங்கள். உங்களுக்குத் தீங்கு ஏதும் நேரவில்லை என்பது மன ஆறுதலைத் தருகின்றது." - என்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

உடனே அமைச்சர் ஜோன்ஸ்டனைத் தொடர்பு கொண்டார் பிரதமர்.

"எதிரணி எம்.பி., ரி.என்.ஏயின் எம்.பி. என்றெல்லாம் பார்த்து யாரேனும் தவறாக நடந்து விடுவார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் விரைந்து அவர்கள் புறப்பட்டுச் செல்ல உடன் நடவடிக்கை எடுங்கள்." - என்ற சாரப்பட தெளிவான உத்தரவை பிரதமர் கொடுத்தார் என நம்பகமாக அறிய வந்தது.

இதற்கிடையில் அமைச்சர் ஜோன்ஸ்டன், சுமந்திரனுடன் பேசினார்.

உரிய நஷ்டத்தைச் செலுத்தத் தயாராகத் தாம் இருக்கின்றார் என சுமந்திரன் கூறினார்.

"வேண்டாம். இப்போது செலுத்த வேண்டாம். அடுத்தடுத்து இரு வாகனங்கள் ஒரே இடத்தில் ஒரே மாதிரி விபத்துக்குள்ளாகின என்றால் வீதியிலும் ஏதும் தவறு இருக்கக் கூடும். முதலில் விசாரணை நடத்துவோம். உண்மையைக் கண்டறிவோம். அதன் பின்னர் நஷ்டஈடு பற்றித் தீர்மானிக்கலாம்." - என்றார் அவர்.

அந்த விபத்து மற்றும் நஷ்ட ஈடு குறித்து பின்னர் விசாரணை நடத்தித் தீர்மானிக்கலாம், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை எடுத்துச் செல்ல அனுமதியுங்கள் என்ற அமைச்சரின் எழுத்து மூல உத்தரவு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சில நிமிடங்களில் வந்து சேர்ந்தது.

சுமந்திரனும் உடன் புறப்பட்டார். கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்கிற்கு உரிய நேரத்தில் அவரால் பிரசன்னமாகவும் முடிந்தது.

உண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு *Seasoned Politician* தான்...!

- மின்னல் -

## மிரட்டும் 'புத்தாண்டுக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 95 ஆயிரத்து 975 ஆக அதிகரித்துள்ளது.

11 ஆயிரத்து 504 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேலும் 11 பேர் மரணம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது ஆண், திவலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது ஆண், பெபிலியாவல பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயது ஆண், அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயது பெண், கொழும்பு - 14 ஐச் சேர்ந்த 94 வயது ஆண், பரகஸ்தொட பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது ஆண், களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 678 ஆக அதிகரித்துள்ளது.

## மேலும் சில ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் நீதியாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீதியாவல கிராம உத்தியோகத்தர் பிரிவும், மீகஹதென்ன பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வலல்லாவிட தெற்கு, மாகலன்தாவ, போதலாவ, கட்டுகெலே, வெல்மீகொட, கீழ் ஹவெஸ்ஸ, மிரிஸ்வத்த மற்றும் பெலவத்த கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளன.

பொலனறுவை மாவட்டத்தில் ஹெலஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சருபிம கிராம உத்தியோகத்தர் பிரிவு முடக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் குறித்த பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## வைபவங்களையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்துமா மன்றின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் சிவதொண்டன் சுவாமிகள் இணைந்து இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாரத தேசத்திலும் எங்கள் மண்ணிலும் கொரோனா என்னும் கொடிய தொற்றுநோய் தாண்டவமாடுகின்றது. பாரத தேசத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து வீழ்ந்து இறப்பதை நான் காண்கின்றோம்.

பாரத தேசத்திலும் எங்கள் மண்ணிலும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நலன் பெற இன்று முதல் நண்பகல் 12 மணிக்கு மணி ஓசையை ஒலிக்கச் செய்து பிராத்தனை செய்யுங்கள்.

ஆலயங்களில் நாளாந்த பூஜை, நித்திய நைமித்திய வழிபாடுகளைச் செய்யுங்கள். அடியவர்கள் ஆலயங்களில் கூடுவதைத் தவிருங்கள்.

பொதுமக்கள் வீட்டுக்கு வெளியில் செல்வதை இயன்றவரை கட்டுப்படுத்துங்கள்.

சுகாதார மருத்துவ சமூகத்தின் வேண்டுதலுக்கு அனைவரும் மதிப்பளித்து பாதுகாப்பாகச் செயற்படுங்கள்.

சகல வைபங்களையும் ஒத்திவைத்து உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழையுங்கள்.

பாரத தேசத்தில் மக்கள்படும் அவலம் ஓயவேண்டும்படி அனைவரும் வீடுகளில் பிராத்தனை செய்யுங்கள்.

தெருக்களில் கூடுவதையோ தெருவோர வியாபாரம் செய்வதையோ சுகாதாரத்துக்கு இடையூறாக நடப்பதையோ அனைவரும் தவிருங்கள் - என்றுள்ளது.

## தேசிய வெசாக் நிகழ்வு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நயினாதீவில் தேசிய வெசாக் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் நேற்று தேசிய வெசாக் உற்சவ முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவின் தலைமையில் யாழ். மாவட்ட அரச அதிபரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தேசிய வெசாக் நிகழ்வுக்கென தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

கொரோனாத் தொற்று நிலைமைக்கு ஏற்றவாறு அனுசரித்து அதற்கேற்ப தேசிய வெசாக் நிகழ்வை நடத்துவது எனவும், நிகழ்வில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை அதற்கேற்ப மட்டுப்படுத்துவது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தற்போது அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் மிக அமைதியான முறையில் தேசிய வெசாக் நிகழ்வைக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, முப்படைகளின் பிரதிநிதிகள், புத்தசாசன அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் மாவட்ட செயலக அதிகாரிகள், வேலணை பிரதேச செயலர் மற்றும் மதகுருக்கள் கலந்துகொண்டனர்.

## யாழில் 29 பேர் உட்பட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 644 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதில், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 13 பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் 8 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவன ஊழியர்களிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தனியார் வங்கி ஊழியர் ஒருவரும், நட்சத்திர விடுதிப் பணியாளர் ஒருவரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர். ஏனைய மூவரும் இலங்கை மின்சார சபை ஊழியர்கள்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் ஐவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் ஐவரும் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுதலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று கண்டறிப்பட்டது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரண்டு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது. அத்துடன் வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் வைத்தியசாலையில் இருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர். மற்றையவர் இலங்கை மின்சார சபை ஊழியர் என அறிக்கையிடப்பட்டது - என்றார்.

## முல்லைத்தீவில் 13 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் கோரிக்கை விடுத்தது. அது தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரை இருக்கின்றமையால் அதற்கான நடவடிக்கையை எடுங்கள் என அதிகாரிகளை ஆளுநர் வழிப்படுத்தினார்.

தற்போதைய வெலிஓயாவில் இருந்து கொக்குளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் முள்ளியவளை, தண்ணீரூற்று என மாவட்டச்செயலகத்தை அண்டிய பிரதேசம் வரையில் மகாவலி அதிகார சபைக்கு உட்பட்ட பகுதியென 2018ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியும் மகாவலி அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனாவின் காலத்தில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டும் தமது அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் அப்பகுதியைச் செயல்பட விடாது பல தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன என அண்மையில் 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வவுனியா மாவட்டம் பொபஸ்வேவாவிற்கு வருகை தந்த ஜனாதிபதி கோட்டபாய ராயபக்ஷவிடம் அதிகார சபை உத்தியோகத்தர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

வர்த்தமானி அறிவித்தல் இருப்பதனால் அப்படி மகாவலி அதிகார சபைக்கு உட்பட்டு அப்பிரதேசம் செயல்பட ஏற்பாடுகளை மேற்கோள்ளுமாறு ஜனாதிபதி ஆளுநருக்கு அங்கு வைத்துப் பணித்திருந்தார்.

இதன் பின்னர் கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணம் ஆளுநர் செயலகத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பௌத்த விகாரையின் பிக்குகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மகாவலி அதிகார சபையின் மாவட்ட அதிகாரிகள் இது தொடர்பான ஆவணங்கள் மற்றும் அதற்கான வரைபடங்கள் சகிதம் ஆளுநர் உள்ளிட்டோரை சந்தித்தனர். அவற்றைக் காண்பித்து தமது அதிகார சபையின் எல்லையினையும் அதன் செயன்பாட்டினையும் விளக்கி அதனை தொடர அனுமதி கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்த ஆளுநர், ஜனாதிபதியும் இவ்விடயத்தில் பணிப்புரை விடுத்துள்ளமையால் அதனை செய்யுங்கள், ஆனால் வெளியார் எவருக்கும் அங்கே நிலம் வழங்கப்படாமல் இருப்பதனை உறுதி செய்யுங்கள் எனப் பணித்துள்ளார் என அறிய வந்தது.

இதன் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் பகுதி நிலம் - சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பகுதி - பறிபோகும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அதிர்ச்சி தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ உதவி நெறிமுறைகள் தொடர்பான ஆவணங்களில் இலங்கை - சீனா கைச்சாத்து



இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து இலங்கைக்கு சீனா ஆதரவளித்தமைக்கு பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன சீனப் பாதுகாப்பு அமைச்சரிடம் நன்றி தெரிவித்தமையுடன், உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவி நெறிமுறை தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கைக்கு இரு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த சீனப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கினுடனான இருதரப்பு கலந்துரையாடல் கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன் போதே ஜெனரல் கமல் குணரத்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பெங் தலைமையிலான சீன தூதுக்குழுவுடன் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹோங், இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே மற்றும் முப்படைத் தளபதிகள் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்த ஜெனரல் கமல் குணரத்ன, பௌத்தம், வர்த்தகம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உலகளாவிய இணைப்பு உள்ளிட்ட பல வழிகளில் சீனா இலங்கையின் வரலாற்று ரீதியில் நட்பு நாடாக இருந்து வருகின்றது. - என்றார்.

மேலும், அண்மையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் போது சீன அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு பாதுகாப்பு செயலாளர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த ஜெனரல் பெங் -

நடைமுறை சாத்தியமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை பாதுகாப்பு செயலாளர் மற்றும் இலங்கை சுங்க திணைக்களப் பணிப்பாளர் நாயகமும் மாணவர் சங்கத்தின் தலைவரும், ஸ்தாபக உறுப்பினருமான மேஜர் ஜெனரல் (ஓய்வு) விஜித ரவிப்பிரிய ஆகியோரின் அழைப்பின் பேரில் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பெங் மேற்படி இணையத் தளத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

உயர்மட்ட சீனப் பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களிலும் கைச்சாத்திடப்பட்டன.

மேலும் இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் பாதுகாப்பு செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் சீனத் தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கிவந்த ஜெனரல் பெங் ஆகியோருக்கிடையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

# பிரதமரை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை விஜயத்தை நிறைவு செய்த பின்னர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவசரமாக சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி போடும் பணி வவுனியாவில் ஆரம்பம்

வவுனியாவில் உள்ள மருத்துவ சேவையாளர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு இரண்டாம் கட்ட கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிட் - 19, 'கொவிஷீல்ட்' தடுப்பூசிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களிற்கு ஏற்றும் பணி கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய மூன்று மாதங்களின் பின்னர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றும் பணிகள் வடக்கில் வியாழன் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய வவுனியா வைத்தியசாலையில் மருத்துவ சேவையாளர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

# 'கரும்பு' சிறுவர் பாடல் நூல் இறுவெட்டு என்பன வெளியீடு




ஓய்வுநிலை ஆசிரியை எஸ்.தெய்வேந்திரமூர்த்தி உருவாக்கிய 'கரும்பு' சிறுவர் பாடல் நூல் மற்றும் பாடல் இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதல்வர் ரி.வரதன் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டமையை அடுத்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழ்த்தாய் இசைக்கப்பட்டதை அடுத்து வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கலந்து கொண்டமையுடன், மாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவசிவா உள்ளிட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

'கரும்பு' சிறுவர் பாடல் நூலை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வெளியிட்டு வைக்க மாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவசிவா பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 'கரும்பு' சிறுவர் பாடல் இறுவெட்டை மாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவசிவா வெளியிட்டு வைக்க நடனபாட ஆசிரியை எஸ்.சிறிதரன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டதுடன் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சமூகவலைத் தளங்களில் போலி தகவல் பரப்பிய இளைஞர் கம்பளையில் கைது

சமூக வலைத்தளங்களில் போலி செய்திகளை பரப்பியமை தொடர்பில் கம்பளை பொலிஸாரால் கம்பளை - கஹட்டபிட்டி பிரதேசத்தில் 19 வயதுடைய இளைஞனொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

புலனாய்வுப்பிரிவினரால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமையவே இந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் உபயோகித்த கையடக்க தொலைபேசி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கம்பளை பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொவிட் பரவலுக்கு மத்தியில் இவ்வாறான போலியான செய்திகளும் அதிகளவில் பரப்பப்படுகின்றன. உண்மையான தகவல்களைப் பகிர்வதற்கு சகலருக்கும் உரிமை காணப்படுகிறது. ஆனால் மக்களை பதற்றமடையச் செய்யும் வகையில் செய்திகளை பரப்புவதற்கு இடமளிக்க முடியாது.

மக்களுக்கிடையில் பிரிவினையைத் தோற்றுவிக்கும் வகையில் போலிச் செய்திகளைப் பரப்புவது இலங்கையில் குற்றவியல் சட்டம் மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் படி தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும். அதற்கமையவே இந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மக்கள் வங்கியின் 22 கிளைகள் பூட்டு

நாட்டில் நிலவும் கோவிட் - 19 தொற்று நோய் பரவல் காரணமாக மக்கள் வங்கியின் கிளைகள் உட்பட 22 சேவை மத்திய நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என அந்த வங்கி தெரிவித்துள்ளது.

மக்கள் வங்கி தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் தனது வாடிக்கையாளர்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கையில் இதனைக் கூறியுள்ளது.

பதுளை மாவட்டம் - கெப்பெட்டிபொல கிளை

கொழும்பு மாவட்டம் - கட்டுபெத்த கிளை, சொய்சாபுர சேவை மையம் மற்றும் நாவல சேவை நிலையம்.

கம்பஹா மாவட்டம் - கொட்டதெனியாவ கிளை.

ஹம்பாந்தோட்டை மாவட்டம் - குடாவெலல கிளை, அம்பாந்தோட்டை கிளை மற்றும் கடல்சார் சேவை நிலையம்.

கண்டி மாவட்டம் - பிலிமதலாவை கிளை மற்றும் ஹதரலியத்த கிளை, கேகாலை மாவட்டம் - ரம்புக்கனை கிளை.

குருநாகல மாவட்டம் - நாரம்பொல கிளை, கொபைகனே கிளை, பிங்கிரிய கிளை, நிக்கவ ரெட்டிய கிளை, கட்டுபொத்த சேவை நிலையம், பொரலுவெள சேவை நிலையம் மற்றும் பன்னல சேவை நிலையம்.

மாத்தறை மாவட்டம் - கந்தர கிளை, திருகோணமலை மாவட்டம் - கந்தளாய் கிளை மற்றும் மொல்லிப்பொத்தனை சேவை நிலையம் என்பன மூடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மை மேதினம் எப்போது?

மேதினியின் மேன்மக்களான உழைப்பாளர்களை உயர்த்தி, மேன்மைப்படுத்திப் போற்றும் நாள் இன்று.

தொழிலாளர்களைச் சிறப்பிக்கும் மேநாள் இது.

உலகம் பிளவுண்டு கிடக்கின்றது. ஏழை – பணக்காரன்; ஆள்பவன் – ஆளப்படுபவன்; ஒடுக்குபவன் – ஒடுக்கப்படுபவன்; அடக்குபவன் – அடக்கப்படுபவன்; சுரண்டுபவன் – சுரண்டப்படுபவன். – இப்படி முரண்பட்டு உழல்கின்றது மனித சமுதாயம்.

இந்த வர்க்க முரண்பாடுகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுத் துவண்டு கிடக்கும் உழைப்பாளர்களின் பக்கத்து நியாயங்களை எடுத்துரைத்து, நீதியை மீட்பதற்காகவே மே தினம் போன்ற உரிமை நாள்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

நாளாந்தம் வேர்வையும், குருதியும் சிந்தி, இந்த மேதினியை மேம்படுத்தும் உழைப்பாளி – தொழிலாளி – குறித்து மேதினி சிந்திக்கும் நாள் இன்றுதான்.

தொழிலாளியின் உழைப்பின் சக்தி குறித்து ஒரு தெளிவான – அர்த்தம் பொதிந்த – ஆழமான – விளக்கம் உண்டு. அது நோக்கற்பாலது.

*“வியர்வை சிந்தி உழைக்கும் மானுடனின் உழைப்பு சக்தி பொருளாக மாறுகின்றது. அந்தப் பொருள்களில் இருந்து ஒரு பண்ட உலகம் தோன்றுகின்றது. அந்தப் பண்ட உலகத்தில் உழைப்பவனுக்கு அவனால் உருவாக்கப்படும் பொருள் அந்நியமாகின்றது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கே அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவரின் செல்வமாகின்றது. முதலாளித்துவப் பொருள் உலகில் உழைக்கும் மனிதன், தனது ஆக்கத்தைத் தானே இழக்கும் பரிதாபமும் முதலாளியம் வலுவாகும் அநீதியும் இப்படிக் கட்டவிழ்ந்து தொடர்கின்றன.”* – என்பதுதான் அந்த உண்மை விளக்கம்.

உழைப்பனுக்கு அவனது உழைப்பு, அந்நியமாகி வேறொருவனின் சொத்தாக மாறுவது போல, தொழிலாளர்களின் உரிமைகளுக்கான இன்றைய மேதினம் கூட, தொழிலாளர்களின் நலனுக்காக அனுஷ்டிக்கப்பட முடியாததாகி, அவனுக்குப் புறம்பாகி, கொரோனாக் கொரூரத்தில் காலாவதியாகிப் போகும் துரதிஷ்டம் நேர்ந்திருக்கின்றது.

பொருளிய உலகத்தின் இத்தகைய உண்மை நிலையை நமக்கு எடுத்துரைகின்றார் கார்ள் மாக்ஸ்.

இன்று மேதினத்தில் நாம் ஏத்திப் புகழும் உழைப்பாளியை மையப் புள்ளியாக வைத்துத் தனது சிந்தனைக் கட்டுமானத்தைக் கட்டி எழுப்புகின்றார் அவர்.

உழைக்கும் மனிதன். அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்படும் உழைப்பு சக்தி. அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம். அந்த உற்பத்தி உலகத்தில் இருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள். அந்த உற்பத்தி உறவுகளில் இருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள். அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள். அந்த முரண்பாடுகளில் இருந்து வெடிக்கும் புரட்சிகள். அந்த புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள். அந்தச் சமூக மாற்றங்களால் அசைந்து செல்லும் வரலாறு. – இப்படியாக உழைக்கும் கரங்களில் இருந்து கட்டவிழ்கின்றது மனித சரித்திரம் எனக் கார்ள் மார்க்ஸின் தரிசனத்தை நமக்கு விளக்குகின்றார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

உண்மையில் உழைக்கும் கரங்களில் இருந்துதான் உலகம் கட்டவிழ்கின்றது. ஆனால் அந்த உழைப்பாளிக்கே அந்த உலகத்தை அந்நியமாக்கி, அதனைச் சுரண்டிக் கொள்கின்றான் முதலாளி.

சிருஷ்டி கர்த்தாவுக்கு, சிருஷ்டிக்கப்பட்ட பண்டம் அந்நியமாகும் துரதிஷ்டத்தை இந்த முதலாளி –தொழிலாளி வர்க்க முரண்பாட்டின் ஊடாக உலகம் காண்கின்றது.

இப்படி உழைப்பாளனின் உழைப்பு சக்தியை ஊறிஞ்சி ஏப்பமிட்டு, ஓர் இராட்சத இயந்திரமாக – மனிதனின் மேம்பட்ட அசுர சக்தியாக – பேயுருக் கொள்ளும் முதலாளியம், இந்த உலகில் தொழிலாளர்களை மட்டுமல்லாமல், முழு மனித இனத்தையுமே அடிமை கொண்டு ஆக்கிரமித்து நிற்கும் பேரவல நிலையை இன்று நாம் காண்கின்றோம்.

உழைக்கும் மனிதன் தானே முதலாளிய சந்தையில் விலைப் பொருளாகும் அபத்தத்தை நாம் நேரில் காண்கின்றோம்.

முதலாளியம் என்ற ஆதிக்க சக்தி, தொழிலாளி என்ற ஆக்க சக்தியை விழுங்கிக் கொள்ளும் அவலத்தைப் பார்த்து நிற்கின்றோம்.

முதலாளியத்தினால் விழுங்கப்பட்டு, விலங்கிடப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கு என்று உண்மையான விடுதலையும், சுதந்திரமும், நீதியும், நியாயமும், உழைப்புக்கான ஊதியமும், பங்கும் கிடைக்கின்றனவோ அன்றுதான் உண்மையான மேதினம் என நாம் கொண்ட முடியும்.

# கொவிட் தொடர்பில் உண்மைத் தகவல் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டனவா?



## அலவத்துவல கேள்வி

தமிழ் – சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனைகளில் அளவு குறைவடைந்தமையே தொற்றாளர்கள் எண்ணிக்கையும் குறைவடைந்தமைக்கான காரணமாகும். ஏன் இவ்வாறு தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் குறைவாகக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது? கொவிட் நிலைமை தொடர்பில் மக்களுக்கு உண்மையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டனவா என்ற சந்தேகம் நிலவுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கடந்த வாரங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளில் அளவு குறைவடைந்தமையே மிகக் குறைந்தளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமைக்கான காரணமாகும். இவ்வாறான சூழலில் கடந்த காலங்களில் கொவிட் நிலைமை தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு உண்மைத் தரவுகளை வெளிப்படுத்தியதா என்ற சந்தேகம் எழுகிறது. நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஏன் குறைவாகக் காண்பிக்கப்பட்டது ?

புத்தாண்டின் போது சுகாதார விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படாவிட்டால் வைரஸ் பரவல் தீவரமடையும் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரித்த போதிலும் , அரசாங்கம் அதற்கான எவ்வித ஏற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்பட்டு விடுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவ்வாறான நிலை தோன்றில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

ஆனால் தற்போது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தனிமைப்படுத்துவதற்கான வசதிகள் இலங்கையிலுள்ள நட்சத்திரக் ஹோட்டல்களில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது மிகவும் அபாயமானதாகும்.

கொவிட் தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால், அதனை நிவர்த்தி செய்வதாகக் கூறி அரசாங்கம் அதன் சகாக்களுக்கு இலாபத்தை ஈட்டிக் கொடுப்பதற்காக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறது.–என்றார்.

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்மதிப்பீட்டு பெறுபேறு வெளியானது

ஐந்தாம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் கல்வியமைச்சுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய மீள்மதிப்பீட்டு பெறுபேறுகளை www.doenets.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று பார்வையிட முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வணிக முகாமைத்துவ பீடத்தின் சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு !





யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஏற்பாட்டில் நிலைபேறான அபிவிருத்திக்கான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பொருளாதார மீண்மைக்கான தீர்வுகளுக்கு ஊக்கமளித்தல் என்ற ஆய்வுக் கருப்பொருளில் அமைந்த 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு இணைய வழி மூலமாக நேற்றும், இன்றும் இடம்பெற்றது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்தியாவைச் சேர்ந்த நிதி முகாமைத்துவப் பேராசிரியர் ஐ.எம். பாண்டே , ஐக்கிய அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ஏ.பரசுராமன் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா சர்வதேசப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனித வளத் துறைப் பேராசிரியர் ஹரி டெஸ்லர் ஆகியோர் முதன்மைப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டின் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து இணைய வழி நேரலையாக ஆய்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இவ் ஆய்வு மாநாட்டின் ஏற்பாட்டுத் தலைவராக முகாமைத்துவ கற்கைள் மற்றும் வணிக பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி. ந. கெங்காதரன் செயற்பட்டார்.

# இடைநிலை மருத்துவமனைகளாக தனிமைப்படுத்தல் நிலையங்கள்

கொவிட் நோயாளிகளுக்காக நடத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களை இடைநிலை மருத்துவமனைகளாக மாற்றுவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என கொவிட் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இப்படியான நிலைமையில், வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் நபர்களின் எண்ணிக்கையையும் குறைக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட தொழிலாளர் சம்பளத்தை 2021 இல் பெற்றுக்கொடுத்தோம்!

## மேதின நாளில் பிரதமர் பெருமிதம்



இரண்டாயிரத்து இருபத்தொன்று ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட வரவு –செலவுத்திட்டத்தில், தோட்டத்தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்தபடி ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை பெற்றுக் கொடுக்க முடிந்தமை நாம் பெற்ற வெற்றியாகும்.

– இவ்வாறு தொழிலாளர் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

சர்வதேச தொழிலாளர் தினமான இன்றைய தின்தில் உழைக்கும் அனைத்து மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினம் உழைக்கும் மக்களின் தலைசிறந்த தினமாகும்.

பொதுவாக தமது நாட்டுக்காக மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகினதும் முன்னேற்றத்திற்காக உழைக்கும் மக்களின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டத்தக்கது. பணியிடத்தில் வியர்வை சிந்தி அனைவரினதும் நல்வாழ்விற்காக நீங்கள் ஆற்றும் சேவையை பாராட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் அறிந்த வகையில் சர்வதேச தொழிலாளர் தினம் உழைக்கும் மக்களின் வலிமையையும், ஒற்றுமையையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் ஒரு தினமாகும். இருப்பினும், உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக கடந்த ஆண்டு போன்றே இவ்வருடமும் பேரணிகள், கூட்டங்களின்றி சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பேரழிவு சூழ்நிலையில், இலங்கை உழைக்கும் மக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றி மே தினத்தை புதிய வழியில் கொண்டாடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

எவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியிலேனும் உழைக்கும் மக்களுக்கான உரிய மரியாதையை எமது அரசாங்கங்கள் வழங்கியுள்ளன என்பதை இத் தருணத்தில் நினைவூட்டுகின்றேன். அத்துடன் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதிலும் உறுதியாக செயற்பட்டோம்.

இரண்டாயிரத்து இருபத்தொன்று ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட வரவு –செலவுத்திட்டத்தில், தோட்டத்தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்தபடி ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை பெற்றுக் கொடுக்க முடிந்தமை நாம் பெற்ற வெற்றியாகும்.

அத்துடன் தொழிலாளர் சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு ஊழியர் சேமலாப நிதி சட்டம், தொழில் பிணக்குகள் சட்டம் மற்றும் இழப்பீட்டு கட்டளைச் சட்டம் போன்ற பல தொழிலாளர் சட்டங்களை புதுப்பித்ததன் ஊடாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கத்திற்கு முடிந்துள்ளமை உங்களுக்கான மரியாதை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

'மக்கள் நலன் சார்ந்த பணியிடம்; பாதுகாப்பான தேசம்' எனும் தொனிப் பொருளிலான இவ்வாண்டு மே தினத்தில் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உழைக்கும் மக்கள் அனைவரும் கைகோர்ப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக இரவு பகலாக உழைக்கும் உங்களது அர்ப்பணிப்பையும், தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான உங்களது பங்களிப்பையும் நான் மனதார பாராட்டுகின்றேன். உலகவாழ் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! – என்றுள்ளது.

# உலகப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இரத்தம் சிந்தும் தொழிலாளர் கை ஓங்கட்டும்

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்

உலக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இரத்தமும், வியர்வையும் சிந்தும் தொழிலாளர்களுடைய கை ஓங்கட்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் வாழ்த்தியுள்ளார்.

தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் –

அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கெதிராகவும் முன்னெடுக்கப்பட்ட தொழிலாளர் புரட்சியின் விளைவே இந்த மே தினம். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக மே தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொருளாதார உயர்ச்சிக்காகவும் அயராது உழைக்கும் தொழிலாளர்களது உழைப்பு போற்றுதற்குரியது.

தற்போது உலகளாவிய ரீதியாக ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச சூழ்நிலையில் அளப்பரிய சேவையாற்றும் அனைத்து விதமான சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோரும் இத் தருணத்தில் போற்றுதற்குரியவர்கள். உயிரை துச்சமென நினைத்து நாட்டுக்காகவும்,நாட்டு மக்களுக்காகவும் அளப்பரிய சேவையாற்றி வருகின்றனர்.

நாட்டுக்காகவும், வீட்டுக்காகவும் உழைக்கும் தொழிலாளர்கள் அனைவரும் கொடிய வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்கப்பட்டு அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியும்,சுபீட்சமும் உண்டாக வாழ்த்துகிறேன்.என மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# சிந்தனையில் புதிய மாற்றம் மேதினம் கொண்டு வரட்டும்!

## சக்திகிரீவன் வாழ்த்து



யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்தி கிரீவன் தமது மேதினச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:–

சிவபிரானே நல்ல தொழிலாளி என்பதை இன்றைய மே தினத்தில் ஞாபகமூட்டுவது பொருத்தமானதாகிறது. தொழிலாளியைத் துன்புறுத்தினால் அனைவர் முதுகிலும் அடி விழும் என்பதை உணர்வதற்கு பிட்டுக்கு மண் சுமந்த சருக்கம் நம்மவருக்கு சான்றாக அமைகிறது. வந்திக்குக் கூலியாளாக வந்த சிவ பிரானுக்கு பிரம்படிபட்டதால் உலகே அந்தத் தண்டனையைப் பெறவேண்டியதாயிற்று.

தொழிலாளிக்குத் துன்பம் விளைவித்தால் அதற்கான பலனை உலகம் அனுபவித்தே தீரும் என்பதற்கு இந்தப்புராணம் நல்ல உன்னத உதாரணமாகிறது. நாம் உழைத்து வாழ வேண்டும் என்பதற்கும், தொழிலாளியைத் துன்புறுத்தக்கூடா து என்பதற்கும் இது நல்ல சான்றாகிறது. சிவபிரானே நல்ல தொழிலாளி. தொழிலாளியின் தெய்வாம்சத்தைப் போற்றுவோமாக. மக்களால் விரும்பப்படாத மலத்தைக் கையால் அள்ளுபவர்களை 'ஹரிஜனம்' என்பார்கள். இதன் அர்த்தத்தைப் புரிந்தால் அவனையே வீழ்ந்து வணங்க வேண்டிவரும். ஹரிஎன்றால்விஷ்ணு என்று அர்த்தம்.

மக்களால் செய்ய முடியாததைக் கடவுளே செய்வான். மக்கள் மலத்தைக் கையால் அள்ளக் கூசுவார்கள். இந்தக் காரியத்தைக் கூசாது செய்யக் கூடியவன் இறைவனொருவனே. அவனே ஹரி ஆதலால் இவர்களை ஹரி ஜனங்கள் என்பார்கள்.

நாமோ விளக்கமில்லாது அவர்களைத் தாழ்ந்தவர்களாக எண்ணிவிட்டோம். அதற்கான தண்டனைகளை அனுபவிக்கத் தொடங்கிவிட்டோம். எமது சிந்தனையில் புதிய மாற்றத் தைக்கொண்டுவர இம் மே நாளில் திடசங்கற்பம் பூணுவோமாக! – என்று உள்ளது.

# சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதே உழைப்புக்கான உத்தரவாதம்

## மே தினச் செய்தியில் பொ.ஐங்கரநேசன்



முதலாளி வர்க்கத்தால் ஈவிரக்கமின்றி நாள் முழுவதும் வேலை வாங்கப்பட்ட தொழிலாளிகள் இரத்தம்சிந்தி நிகழ்த்திய நெடிய போராட்டத்தின் விளைவாக வேலை நேரம் 8 மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட்டது.

சர்வதேச அளவில் தொழிலாளர்களின் இந்த வெற்றி ஆண்டுதோறும் மே முதலாம் திகதி அன்று கொண்டாடப்படுகிறது.

ஆனால், கடந்த ஆண்டில் இருந்து உலகம் முழுவதும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மில்லியன் கணக்கான தொழிலாளிகள் தொழில் வாய்ப்பை இழந்து நாள் முழுவதும் வீட்டுக்குள் முடங்கும் நிலையே நீடிக்கிறது.

கொரோனா வைரஸ் விலங்கு வைரஸ்'க்களில் இருந்து உருமாறிய திரிபு என அடையாளம் காணப்பட்ட நிலையில், வலிய பாடம் ஒன்றை எமக்குப் போதித்திருக்கிறது. அது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதே எமது உழைப்புக்கான உத்தரவாதம் என்பதாகும்.

மே தினம் தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடகச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அந்த ஊடகச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனாப் பெருங்கொள்ளை நோய் மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களைப் பலியெடுத்ததோடு இதைவிடப் பன்மடங்கு அதிகமானோரின் தொழில் வாய்ப்பைப் பறித்துள்ளது. இவர்களில் பெரும்பான்மையானோர் தினக் கூலியைத் தவிர வேறு எந்தக் கொடுப்பனவுகளையோ சலுகைகளையோ பெறாத முறைசாராத் தொழிலாளர்கள் ஆவர். இவர்களைக் கொரோனா தாங்கொணாத வறுமையின் பிடிக்குள் தள்ளி வருகிறது.

திறந்த வெளிகளில் வேலை செய்யும் விவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள் போன்ற முறைசாராத் தொழிலாளர்களின் எதிர்காலம் மேன்மேலும் கேள்விக்குறியாகி வருகிறது. பூமி சூடாகி வரும் சூழற் பிரச்சினையால் வெப்ப அலைகளின் பாதிப்பில் இருந்து விடுபடுவதற்கு வேலை நேரத்தைக் குறைப்பதுதான் இவர்களுக்கு முன்னால் உள்ள ஒரே தெரிவு என்று ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேசத் தொழிலாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக இன்னும் 9 ஆண்டுகளில் 8 கோடி தொழிலாளர்கள் வேலை இழப்பர் என்பது இவர்களின் கணிப்பு.

உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு முன்னெடுத்த போராட்டமே எட்டு மணி நேர வேலை என்ற வெற்றியை அவர்களுக்குப் பெற்றுத்தந்துள்ளது. அந்த வேலையைக் கொரோனா, காலநிலை மாற்றம் மற்றும் பிற சூழற் பாதிப்புகளால் பறிகொடுக்காதிருப்பதற்கும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது ஏற்பட்டுள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரம் தொழிலாளர்களுக்கு மாத்திரமல்ல் சுற்றுச்சூழலுக்கும் எதிரானது. வளர்ச்சியின் பெயரால் முன்னெடுக்கப்படும் சூழலைப் பாதிக்கும் அனைத்துச் செயற்பாடுகளையும் நிராகரிப்போம். செம் மே தினம் இனி செம் பசுமை மே தினம் ஆகட்டும். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** முதலமைச்சர் விவகாரத்தில் ‘வித்திக்கும்’, ‘விக்கிக்கும்’ மாவை வெளியிட்ட அறிக்கையைப் படித்தீர்களா?

**பதில் :-** படித்தேன்! அதுபற்றி மனதில் எழுந்த சில எண்ணங்கள் கீழே.



மாவை பற்றிப் பேச ‘விக்கி’யாருக்கு எந்த உரிமையோ, தகுதியோ இல்லை.

தன்னிடம் தரப்பட்ட மாகாணசபையை எந்தப் பயனும் இன்றி (தனக்கான வாகனத்தைக் கேட்டுப் பெற்றதைவிட்டால்) ஐந்து ஆண்டுகளாக நாசமாக்கிய அவர், இந்த விடயத்தில் வாய்திறப்பதே தவறு.

மாகாணசபைத் தேர்தலில் வென்றபோது, ‘மாவை விட்டுத் தந்ததால்த்தான் நான் இப்பதவிக்கு வந்தேன்’ எனவும், ‘எனக்கு அனுபவம் ஏதும் இல்லை, மாவையின் ஆலோசனையைப் பெற்றே நான் நடப்பேன்’ எனவும் பேசிய செய்திகள் பத்திரிகைகளிலேயே வெளிவந்தன. இன்று வெட்கமில்லாமல் மாவையை விமர்சிக்கத் தலைப்படுகிறார் அவர்.



அப்படிப்பட்டவரின் வெற்றுச் செய்திக்காக, பல்லாண்டு அரசியல் அனுபவம்மிக்க மாவை இந்த அளவுக்கு அதிர்ந்திருக்கத் தேவையில்லை.

வருடப்பிறப்பன்று செய்தி வெளியிடப்பட்டிருப்பதைப் பற்றி, மாவை அதிகம் கவலைப்பட்டிருக்கிறார். அது தேவையற்றது. பத்திரிகைக்காரர்கள் பரபரப்பான செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது இயல்பே.

வருடப்பிறப்பன்றே எதிர்வினையாகவேனும் அந்தச் செய்தியின் மூலம் தான் முக்கியப்படுத்தப்பட்டிருப்பதை மாவை ரசித்திருக்கவேண்டும்.

மாவையையும் அவர் அரசியல் வாழ்க்கையையும் அனைவரும் அறிவார்கள். பதவிநோக்கிய தகுதிக்காகத் தனது தியாகங்களைத் திரும்பத் திரும்ப மாவை வரிசைப்படுத்துவது தேவையற்றது.

தமிழரசுக்கட்சிக்குள் பல்லாண்டு காலம், மாவை போன்ற மூத்தவர்கள் பல பதவிகளைத் தாராளமாக வகித்துவிட்டனர். இனி மற்றவர்கள் விமர்சிப்பதற்கு முன்பாக, ஆற்றல் உள்ள இளையோரில் ஒருவரை இனங்காட்டி (அது அவரது மகனாய் இல்லாமலிருப்பது நல்லது) தான் ஒதுங்கி, மூத்த தியாகி எனும் புகழை நிலைநிறுத்திக் கொள்வது அவருக்கு நல்லது. இச்செய்தி, கட்சிக்குள் பலகாலமாய்ப் பதவியில் இருக்கும் மூத்தவர்கள் அனைவர்க்குமாக நான் சொல்ல விரும்பும் செய்தியாம்.

நிறைவாக, ‘காலைக்கதிர்’ ஆசிரியர் ‘வித்தி’, மேற்படி செய்தியை எதுவித நோக்கமுமின்றி வெளியிட்டாரா என்பதை அவர்தான் அறிவார். அப்படி வெளியிட்டிருந்தால் அதில் தவறேதும் இல்லை. பழைய காயங்களின் வலியால் அவர் மேற்படி செய்தியைப் பழிவாங்கும் நோக்கோடு எதிர்வினையாய்ப் பயன்படுத்தியிருந்தால் அது பத்திரிகாதர்மம் ஆகாது. இந்த விடயத்தில் வித்தியின் மனச்சாட்சிதான் உண்மையை உரைக்கவேண்டும்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **யாரங்கே? கம்பவாரிதியின் கேள்வி பதிலைக் காலைக்கதிரில் உடன் நிறுத்துங்கள். ஹி..ஹி..**

**2. கேள்வி:-** சுமந்திரனைக் கட்சியிலிருந்து வெளியேற்றும்படி ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சம்பந்தனுக்கு எழுதிய கடிதம் பற்றி?



**பதில் :-** பாவம்! இவ்வளவுபெரியசட்டத்தரணி, உலகம் தெரியாமல் பேசுகிறாரே என்று கவலையாயிருக்கிறது. கட்சிக்குள்ளும், சம்பந்தனார் மனதிலும் சுமந்திரன் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை அறிந்திருந்தால் அவர் இப்படி அறிக்கை விட்டிருக்கமாட்டார். அவர் அறிக்கைவிட்டு ஓரிரு வாரங்கள் ஆகின்றன. அதுபற்றி சம்பந்தனாரிடமிருந்து எதுவித ‘அசுமாத்தத்தையும்’ இதுவரை காணவில்லை. அதனால், அவர் மீண்டும் போர்க்குரல் எழுப்பவேண்டும். இல்லாவிட்டால் தான் கட்சியிலிருந்து வெளிவந்துவிடவேண் டும். அதுதான் மரியாதை. நிலைமை விளங்காமல் இப்படியே இயங்கினால் சம்பந்தன் இவரையே வெளியேற்றிவிடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.



உலகநாதரின் ஒப்பீனியன் * **சும்மா இருப்பதே சுகம்.**

**3. கேள்வி:-** சாத்வீகம் நிறைந்த நம் சைவசமயத்தில் மிருகபலியா? தேவையில்லாமல் நம் சமயத்தின் பெருமையைக் குறைக்கப் பார்க்கிறீர்!

**பதில் :-** நமது சமயம் சாத்வீகம் நிறைந்த சமயம் என்பதில் எந்த ஐயமுமில்லை. அதுபோலவே ராஜச, தாமச செய்திகளும் அங்கு பதிவாக்கப்பட்டிருப்பதையும் யாரும் மறுக்க முடியாது. இறைவடிவங்களிலேயே காளி, வீரபத்திரர் போன்ற தெய்வ வடிவங்கள் தாமச, ராஜச வடிவங்களாகவே கருதப்படுகின்றன. பிள்ளையை வெட்டிக்கொடுத்தவர், கண்ணைக் குத்திக்கொடுத்தவர் என மேற்படி குணாம்சங்களைக் கொண்டிருந்தும் இறைவனை அடைந்த அடியார்கள் பற்றியும் நம் சமயம் பேசுகிறது.

இனி, மிருகபலி பற்றிய கேள்விக்கான விடையைச் சுருக்கமாகச் சொல்ல முயல்கிறேன். நம் சமயத்தின் முதல் நூலாகிய வேதங்களில், யாகங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறதாம். அந்த யாகங்கள் பலவகைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன என்கிறார்கள்.

அவற்றில் நெய்ச்சாதத்தை ஹோமம் செய்வது, நெய்யை மட்டும் ஹோமம் செய்வது, பக்குவமான தானியங்களை ஹோமம் செய்வது, மாவில் செய்த பலகாரங்களை ஹோமம் செய்வது, பாலை ஹோமம் செய்வது, அர்ச்சதையை ஹோமம் செய்வது, சுள்ளியை மட்டும் ஹோமம் செய்வது என பலவகைகள் உண்டாம்.

யாகங்களை ‘பாகயாகம்’, ‘ஹவிர்யாகம்’, ‘ஸோமயாகம்’ எனப் பிரித்து அவை ஒவ்வொன்றிலும் ஏழுவிதமான யாகங்களை அமைத்து, மொத்தமாய் இருபத்தொரு யாகவகைகள் சொல்லப்பட்டிருக்கிறதாம். இவற்றில் பாகயாகங்கள் ஏழிலும் மிருகபலி இல்லையாம். ஹவிர்யாகத்தின் முதல் ஐந்திலும் மிருகபலி இல்லையாம். ஆறாவதான ‘நிரூட பசுபந்தம்’ என்ற யாகத்திலிருந்துதான் மிருகபலி ஆரம்பிக்கிறதாம். ஸோமயாகத்தில் ஸோமபானத்தை (மது) ஹோமம் செய்வார்களாம். இந்தச்செய்தியை மூத்த காஞ்சிப்பெரியவரே தன்னுடைய ‘தெய்வத்தின்குரல்’ நூலில் எழுதியிருக்கிறார்.

நமது சமயத்தின் முதல்நூலான வேதங்களே சொல்லியிருக்கின்ற ஒரு விடயத்தை இல்லை என்று சொல்லச் சொல்கிறீர்களா? இங்கே நான் சொல்லியிருப்பது யாகங்களில் மிருகபலி செய்யப்படுவதைப் பற்றியே. நம் ஊரில் சிலகோயில்களில் வேள்வி என்ற பெயரில் கண்டபடி ஆடு வெட்டுவதை அல்ல.

உலகநாதரின் ஒப்பீனியன் * **அர்த்தமுள்ள இந்துமதம் என்ன சொன்னது?**

**4. கேள்வி:-** கொரோனா, பாடசாலைகளை மீண்டும் மூடிவிட்டதே?

**பதில் :-** மாணவர்களின் படிப்பையே மூடிவிடுமோ என்பது தான் இப்போது எழுந்திருக்கிற கேள்வி.

உலகநாதரின் ஒப்பீனியன் * **கற்றது கைம்மண் அளவு.**

**5. கேள்வி:-** இந்தியாவில் அச்சமூட்டுகிற கொரோனா வீச்சைப் பார்த்தீர்களா?

**பதில் :-** அதையும் பார்த்தேன். கும்பமேளாவில் மக்களைக் குவியவிட்டதையும் பார்த்தேன்.

‘அஞ்சுவது அஞ்சாமை பேதைமை’ என்ற குறள் தான் ஞாபகத்திற்கு வந்தது. ஒன்று, நோய்க்கு அஞ்சி நடக்கவேண்டும். அல்லது மரணத்திற்கு அஞ்சாமல் இருக்கவேண்டும். இரண்டிற்கும் ஆசைப்பட்டால் எப்படி?

உலகநாதரின் ஒப்பீனியன் * **கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.**

**6. கேள்வி:-** ‘ஷூமில்’ வகுப்புகள் நடத்துகிறீர்களே. தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இருக்கிறது என்று ‘பீத்தும்’ உங்களிடம் ஒரு கேள்வி. ‘ஷூம்’ பற்றியும் உங்கள் இலக்கியங்களில் இருக்கிறதா?

**பதில் :-** ஏன் இல்லாமல்? சிவன், பார்வதி திருமணத்தைப் பார்க்கப் பலரும் கூடியதால் வடக்கு தாழத் தொடங்கியதாம். அதனால் எல்லோரும் அச்சப்பட சிவனார் அகத்தியரைக் கூப்பிட்டு ‘நீ தெற்கு நோக்கிச் சென்றால் பூமி சமப்படும் என்றாராம். அதற்கு அகத்தியர் ‘அப்படியானால் நான் உங்கள் திருமணக் காட்சியைக் காணமுடியாதா?’ என்று கேட்டதற்கு, ‘நீ அங்கிருந்தே அதைக்காண ஒழுங்கு செய்கிறேன்.’ என்று கூறி ஒழுங்கு செய்தாராம். எப்படி என்கிறீர்களா? ‘ஷூம்’ முறையிலாய்த்தான் இருக்கும்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **இது உங்களுக்கே கொஞ்சம் ‘ஓவராய்’ப் படவில்லையா?**

**7. கேள்வி:-** சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறாரே?



**பதில் :-** மணியோசைதான் வந்திருக்கிறது. யானை எப்போ வரப்போகிறதோ?

உலகநாதரின் ஒப்பீனியன் * **‘நீ முன்னாலே போனா நான் பின்னாலே வாறேன்’**

**8. கேள்வி:-** அடுத்தடுத்து நிகழும் அரசியல் கைதுகள் பற்றி?

**பதில் :-** ‘கப்சிப்’ (நான் நல்லாய் இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?)

உலகநாதரின் ஒப்பீனியன் * **வாரிதிக்கும் நடுக்கமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிம்பிக் குதிரை சவாரிப் போட்டியில் பங்குபற்றும் முதலாவது இலங்கையர்!



2021டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் குதிரை சவாரி போட்டிக்கு இலங்கை சார்பில் மெட்டில்டா கார்ல்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ டுவிட்டர் பதிவொன்றை மேற்கொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் குதிரை சவாரிப் போட்டியில் கலந்து கொள்ளும் முதலாவது இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிதீவிர சிகிச்சைக்காக 3 கட்டில்களே வடக்கில்!

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலேயே கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான அதி தீவிர சிகிச்சைப் பிரிவு காணப்படுகின்றது எனவும், அதில் 3 கட்டில்கள் மாத்திரமே உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கொவிட் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. தெற்கிலுள்ள வைத்தியசாலைகளின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டில்கள் ஏறத்தாழ நிரம்பிய நிலைமையிலேயே காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்திலும் கொவிட் தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில், கொவிட் நோயாளிகளுக்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மாத்திரமே உள்ளது. அந்த வைத்தியசாலையிலும் 3 கட்டில்கள் மாத்திரமே உள்ளன.

தற்போது ஒரு நோயாளி சிகிச்சை பெற்று வருகின்றார். இதேவேளை, ஒட்சிசன் சிலிண்டருக்கு யாழ்ப்பாணத்திலோ வடக்கு மாகாணத்திலோ தட்டுப்பாடுகள் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உயர்தரப் பெறுபேறுகள் தொடர்பில் அரசிடம் முறையான திட்டம் இல்லை

## இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு



க.பொ.த. உயர்தரப் பெறுபேறு விவகாரத்தில் அரசாங்கத்திடம் முறையான திட்டம் எதுவும் இல்லை, இதனாலேயே பெறுபேறு வெளியீட்டுக்கு வெவ்வேறு திகதிகளைச் சொல்லி மாணவர்களும், பெற்றோர்களும் ஏமாற்றப்படுகின்றார்கள் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில் –

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிறைவு பெற்று 6 மாதங்கள் தற்போது கடந்துள்ளன. இதன் பெறுபேறு தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன் வெளியிடப்படும் என முன்னர் சொல்லப்பட்டது. ஏப்ரல் மாதத்திற்குள் வெளியிடப்படும் எனப் பின்னர் சொல்லப்பட்டது.

இப்போது இன்னும் 7 நாள்களில் வெளியிடப்படும் என அதாவது மே மாதத்தில் வெளியிடப்படும் எனக் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடக் கூடிய திகதியை அதன் பணிகள் நிறைவு பெறுவதைப் பொறுத்து பரீட்சை ஆணையாளரால் தீர்மானிக்க முடியும்.

அப்படி தீர்மானிக்கின்ற திகதி ஒரு திகதியாகத் தான் இருக்கமுடியும். எக்காரணம் கொண்டும் வெவ்வேறு திகதிகளாக இருக்கமுடியாது.

ஆனால் இன்று ஒரு பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடும் திகதியைச் சரியாகச் சொல்ல முடியாத அளவுக்கு அரசாங்கம் முறையான திட்டம் எதுவுமில்லாமல் தடுமாறி வருவதை இதன் மூலம் அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் சரியான பெறுபேறு வெளியிடும் திகதி சொல்லும் விடயத்தில் கல்வி அமைச்சரும் பெயில் விட்டுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. கடந்த எமது நல்லாட்சி அரசு காலத்தில் பரீட்சைப் பெறுபேறு வெளியிடும் திகதியை முன்கூட்டியே அறிவித்தோம். அதன்படி பெறுபேற்றை வெளியிட்டோம்.

இதற்குக் காரணம் எம்மிடம் முறையான திட்டம் இருந்தது. அதனால் சரியான திகதியைச் சொல்ல முடிந்தது. இன்றைய அரசாங்கத்திடம் இந்த விடயத்தில் முறையான திட்டம் எதுவும் இல்லாததால் தான் சொல்லும் திகதியில் பெறுபேற்றை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் எதிர்பார்க்க வைத்து ஏமாற்றப்படுகின்றார்கள். அவர்களது பெற்றோரும், அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களும் ஏமாற்றப்படுகின்றார்கள்.

இதனால் மாணவர்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்கள் வேறு இருக்கின்றன. இந்த விடயங்களைக் கல்வி அமைச்சர் உணர வேண்டும்.

பெறுபேறு வெளியிடும் விடயத்தில் வெவ்வேறு திகதிகளைச் சொல்லி மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஏமாற்றுவதை விடுத்துச் சரியான திகதியை அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி கோட்டாவின் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க

சிரேஷ்ட ஊடகவியலாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடமிருந்து அவர் தனது நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார்.



தனது 27 வருட ஊடக வாழ்க்கையில், பிரபல அறிவிப்பாளராக சிறந்து விளங்கிய அவர், ஒரு முன்னணி இலத்திரனியல் ஊடக அலைவரிசையில் நிகழ்ச்சி முகாமையாளராகவும், பணிப்பாளராகவும், பணிப்பாளர் நாயகமாகவும் மற்றும் அலைவரிசையின் தலைவர் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

இலங்கை வானொலியில் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்திய கிங்ஸ்லி ரத்நாயக்க, தனது படைப்புத்திறமைகள் மூலம் ஊடகத் துறையில் மிளிர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹரினுக்கு நடக்கவிருந்த சத்திரசிகிச்சை ஒத்திவைப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு மேற்கொள்ள தயார்ப்படுத்தப்பட்டிருந்த சத்திர சிகிச்சை ஒத்திவைக்கப் பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்யத் தயாராகி இருக்கின்றனர் எனவும் அதற்கு எதிராக அவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளியிட்ட தகவல்களே ஹரின் பெர்னாண்டோவை கைது செய்யத் தயாராகி வருவதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

ஹரின் பெர்னாண்டோவுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மனுஷ நாணயக்காரவும் ஹரின் தகவல்களை உறுதிப்படுத்தி சரியான தகவல்களை வெளியிட்டிருந்தார்.

இந்த தகவல்களை நாட்டுக்கு வெளியிட்டமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவர்களுக்கு விசேட பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் இந்தப் பாராட்டுக்களை தெரிவித்திருந்தார்.

ஹரின் பெர்னாண்டோ, நாடாளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக வெளியிட்ட தகவல்களை அடுத்து, குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அவரிடம், வாக்குமூலம் பெற தனது தலைமையகத்துக்கு வருமாறு அழைத்திருந்தது.

வாக்குமூலம் வழங்கச் சென்ற பின்னர், ஹரின் பெர்னாண்டோவை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய அரசாங்கம் தயாராகி வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் குற்றம் சாட்டி வந்தனர்.

எவ்வாறாயினும் ஹரின் பெர்னான்டோ உடல் நலக் குறைவு காரணமாக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வரு

## தினம் ஒரு விவசாயத் தகவல்


Agriculture Information

### உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்

உலகிற்கே உணவு கொடுக்கும் உன்னதப் பணி செய்பவனே விவசாயி. நாட்டினதும் உலக வாழ்க்கையினதும் முதுகெலும்பே விவசாயம்தான். விவசாயத்தை மறந்த அழித்த எந்த ஒரு இனமும் மண்ணில் உயிர் வாழ முடியாது.

இரவு பகலாக கண் விழித்து கணிப்பொறியில் நாம் என்னென்ன வேலைகளோ செய்யலாம். ஆனால் கணிப்பொறி பயன்படுத்தும் எவரும் ஒரு நெல்மணியை விளைய வைக்க முடியாது என்ற உண்மையை மனதில் வைத்து விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் படித்த நாம் உறுதுணையாய் இருப்பது நமது கடமையாகும். உழைப்பாளர்களுக்கான தினமாகிய இன்று உலகத்திற்காக உழைக்கும் விவசாயிகளுக்கு உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

இந்த வாரம் இவர்...

- ப்ரியமதா பயஸ் -

# ஆபாச நடிகை என்பதால் விஞ்ஞான உலகில் புறக்கணிக்கப்பட்ட பேரழகி ஹெடி லாமர்!



“லாமர் முதலில் கற்பனை செய்த வயர்லெஸ் தொழில் நுட்பம் இன்று செல்போன்கள், வை:ஃபை, புளூடூத், ஜி.பி.எஸ். மற்றும் வழிகாட்டப்பட்ட ஏவுகணை தொழில் நுட்பத்தில் பயன் படுத்தப்படுகிறது.”

ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த ஒரு ஹோலிவுட் நடிகை தான் ஹெடி லாமர் இவர் வெறும் அழகு பொம்மை மட்டுமல்லாமல் சிறந்த அறிவார்ந்த பெண்ணாகவும் விளங்கியுள்ளார்.

இவர் இன்றைய நவீன விஞ்ஞானத்தின் வயர்லெஸ், புளூடூத், வைபை போன்ற எல்லா வற்றுக்கும் அடிப்படையான ஒரு அற்புதமான விஞ்ஞானக் கண்டுபிடிப்பை கண்டுபிடித்த ஒரு விஞ்ஞானி என்பது பலர் அறியாத விடயம்.

1933 ஆம் ஆண்டு **Esctasy** என்ற படத்தில் நடித்த அவர், 1937 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் WW2 நடக்கும்போது 1940 ஆம் ஆண்டில் பிரிட்டன் நாட்டைச் சென்றடைந்தார்.

உலகப் புகழ்பெற்ற எம்.ஜி.எம் என்னும் **Metro Goldwyn** மேயர், அவர்களால், உலக அழகி என்ற பெயரில்தான் சினிமாவில் அறி முகம் செய்யப்பட்டார் இவர் 1942 இல் இருந்து, பல ஹோலிவுட் படங்களில் நடித்து வெற்றி வாகை சூடினார்.

சினிமா ஷூட்டிங் இடையில், விஞ்ஞானம் பற்றி எழுதி ஆராய்ச்சி செய்த ஒரு மாமேதை இவர். இவர் ஒரு இரட்டை வாழ்க்கை வாழ்ந்த ஓர் அம்பி, அந்நியன், ரெமோ, மாதிரியான பெண் ரெமோதான்.

இவர் ஆறு திருமணங்கள் செய்து கொண்டதை எழுதிய அமெரிக்க பத்திரிகைகள், விஞ்ஞானி என் பதை மட்டும் எழுதவே இல்லை.

அவர் கண்டுபிடித்தது, **Frequency Hoppimg** என்ற அற்புத எலக்ட்ரோனிக் சிக்னல் சாகசம். இது எப்படி யானது என்றால் ஒரே அலைவரிசையில் ஒருவர் சிக்னல் அனுப்பினால், அதை எளிதில் **Jammer** வைத்து தடுத்து விடலாம். இவர் அர்ணா யில் என்ற இன்னொரு விஞ்ஞானியுடன் சேர்ந்து, பல அலை வரிசைகளில் குதிக்கும், ஒரு சிக்னலை கண்டுபிடித் தார். இதன் மூலம் ஒருவரின் சிக்னலை யாராலும் தடுக்க முடியாது.

போர்க் காலங்களில் இது ஒரு வரப்பிரசாதமாக இருந்தது, கம்பிகள் இல்லாத மின்னணு செய்தியை தொலைதூரம் அனுப்ப இந்த தொழில்நுட்பம் பயன் படும்.

இதை அவர் எப்படி கண்டுபிடித்தார்? ஹெடி லாம ரின் முதலாவது கணவர்தான் மாண்டலு இவர் ஹெடியை மிக அதிகமாக துன்புறுத்தி வந்துள்ளார்



அவரை திரைப்படங்களில் நடிக்கவிடாது தடை செய்ததோடு,ஒருசிறைக்கைதிபோன்றவாழ்க்கையை அவருக்கு கொடுத்தார் அவர் எக்காரணம்கொண் டும் ஒரு உதவியாளர் இல்லாமல் வெளியே செல்ல முடியாது என்ற வகையிலும் அதுபோல மாதாந்தம் சிறிய கொடுப்பனவைப்பெறும் ஒருவராகவும் தனது மனைவியான ஹெடியை மாண்டலு வைத்திருந்தார்

ஆனாலும் ஹெடி தனது கணவரின் பகட்டான விருந்துகளுக்கு தலைமை தாங்கினார், மாண்டலு வின் பகட்டான விருந்தில் அடோல்ஃப் ஹிட்லர் மற் றும் பெனிட்டோ முசோலினி ஆகியோர் கலந்து கொண்டனர், அதேபோல அவரது வணிகக் கூட்டங் களில் கூட ஹிட்லர் மற்றும் முசோலினி ஆகியோர் அடிக்கடி கலந்து கொண்டனர்.

இதன் விளைவாக, முறையான கல்வி இல்லாத போதிலும், ஹெடி லாமர் இராணுவ தொழில்நுட்பத் தைப் பற்றி அதிக அறிவைப் பெற்றார், குறிப்பாக வழிகாட்டப்பட்ட **torpedoes** மற்றும் வானொலி கட் டுப்பாட்டு ஆயுதங்களின் பாதிப்புக் குறுக்கீடு என்பவற் றைப்பற்றி அவர்களின் பேச்சுக்கள்மூலம் அறிந்து கொண்டுள்ளார்.

ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும், ஹெடி லாமரின் கணவர் மாண்ட்ல் மூன்றாம் ரைச்சிற்கும், முசோலி னிக்கும் ஆயுதங்களை விற்றார். இதன் போது அவர்க ளின் உரையாடல்களில் ஏவுகணைகள், வானொலி அதிர்வெண்கள் மற்றும் சரியான ஆயுதத்தை எவ் வாறு கண்டுபிடிப்பது என்பது பற்றிய விவாதங்க ளைக் கேட்டார்.

தனது கணவரின் அரசியலில் வெறுப்பு ஏற்பட்டா லும், லாமர் தனது நகைகளை விற்று, ஒரு சூட்கே ஸைக் கட்டிக்கொண்டு, 1937 ஆம் ஆண்டில் பாரி ஸுக்கு தப்பி ஓடினார் அங்கு இருந்தபடி அவர் மாண் டலிடம் இருந்து விவாகரத்தும் பெற்றார், பின்னர் லண்டன், நியூயோர்க் ஆகிய இடங்களுக்கும் பய ணம் செய்தார். அமெரிக்காவுக்கான அவரது விமா னம் பாசிசத்தின் கொடூரங்களிலிருந்தும் அவரது திருமணத்திலிருந்தும் அவரை விடுதலை செய்தி ருந்தது.

ஹெடி லண்டனில் இருந்தபோது மெட்ரோ கோல்ட் வின் மேயரான லூயிஸ்பியை சந்தித்தார், அவர் புதிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதக்கூடிய திறமை யான எழுத்தாளர்களைத் தேடிக்கொண்டு இருந்தார்.

ஹோலிவுட்டுக்கான தனது நீண்ட பயணத்தில் அடியெடுத்து வைக்க உதவக்கூடியவர் மேயர் என்று ஹெடி உணர்ந்தார். மேயர் அவளுக்கு ஒரு வாரத்திற்கு 125 டொலர் என்ற அடிப்படையில் ஆறு மாதங்களுக்கு ஒப்பந்தத்தை வழங்கினார், ஹெடி மேயரைக் கவர விரும்பினார், அதனைவிட மேயர் பிரெஞ்சு கடல் லைனரில் அமெரிக்காவுக்குப் பயணம் செய்கிறார் என்பதை அறிந்த அவர் தனக்கும் ஒரு டிக்கெட் வாங்கினார். முதலில், அவர் மேயரின் மனைவியுடன் நட்பு கொண்டார். இதன் பின்னர் அவர் பல திரைப்படங்களில் நடித்தும் இயக்கியும் வெற்றி கண்டார், ஆனால் அவரின் திரைப்படங்க ளில் இரண்டு பெரும் தோல்வியைக் கண்டது.

இனி லாமரின் கண்டுபிடிப்புக்கு வருவோம் - அவரின் கண்டுபிடிப்புகள் இரகசிய தகவல் தொடர்பு அமைப்பு இன்றைய அல்ட்ராஃபாஸ்ட் நுண்செயலிகளில் பயன்படுத்த, தொலைதூரங்க ளில் தொடர்புகொள்வதற்கான சிறந்த வழியாகும். லாமர் முதலில் கற்பனை செய்த வயர்லெஸ் தொழில்நுட்பம் இன்று செல்போன்கள், வைஃபை, புளூடூத், ஜி.பி.எஸ் மற்றும் வழிகாட்டப்பட்ட ஏவு கணை தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அவருடன் பயணித்த அந்தீல் 1959இல் இறந்தார், அதன்பின்னரும் லாமர் இருபது ஹோலிவுட் திரைப் படங்களைத் தயாரித்தார், 1998 ஆம் ஆண்டில், அவரும் அந்தீலும் காப்புரிமையைப் பெற்ற அரை நூற்றாண்டுக்குப் பிறகு, அவருக்கு எலக்ட்ரானிக் ஃபிரண்டியர் ஃபவுண்டேன் விருது வழங்கப்பட்டது. விருதைப் பற்றி அவர் எப்படி உணர்ந்தார் என்று கேட்டபோது, இது நேரம் பற்றியது என்று கூறினார் லாமர் .

ஆனால் இந்த தொழில்நுட்பத்தை ஏனோ அமெ ரிக்க கடற்படை அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஐம் பது வருடம் கடந்த பின்னர் எலக்ட்ரோனிக் பெடரேன் அழைப்பு இவரது கண்டுபிடிப்பு உண்மையிலேயே சிறந்த கண்டுபிடிப்பு என்று பாராட்டி கௌரவித்தது.

1977ஆம் ஆண்டில் விருது வாங்கியவர், 2000 ஆம் ஆண்டு காலமானார். இவரின் சாதனை, ஒரு பெண் ஆபாச நடிகை என்பதால் உதாசீனப்படுத்தப் பட்டதாக கூறப்படுகிறது .

ஹெடி லாமரின் தன்னம்பிக்கை வாக்கியங்கள் சில -

***Any girl can be glamorous. All you have to do is stand still and look stupid.***

***- Hedy Lamarr***

***I am not ashamed to say that no man I ever met was my father's equal, and I never loved any other man as much.***


***- Hedy Lamarr.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பவர்களுக்கே இப்பூமி சொந்தமடா!






**கே.எஸ்.சிவஞானராஜா**

உழைப்பவர் என்ற ஒரு பெரும் சமூகம் இருப்பதனாலேதான் இந்தப் பூமி தினமும் விடிகிறது. சாமியும் கருணை தரக் காத்திருக்கிறது. அவர்களது வயிறு நிறையும்போதுதான் எங்களது வாழ்க்கை பூக்கிறது.

இயற்கையானது தன்தன் கடமைகளை நேரம் பிசகாது ஆற்றி, வாழ்வியல் வழிகளை நமக்காகத் திறந்து விடுவதைப் போல, உழைப்பாளிகளும், தத்தம் வேலைகளை, ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் உண்மையாகவும் செய்வதனால்தான் நாம் எமது குடும்பங்களை மகிழ்வோடு கொண்டு நடத்த முடிகிறது. அத்தோடு வெல்லவும் முடிகிறது.

உலகிலும் சரி, நாட்டிலும் சரி, தோற்பவர்கள் தொழிலாளிகளாக, உழைப்பாளிகளாக, கூலிகளாக இருப்பதானால்தான் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், பிரமுகர்கள், பெறுமதியானவர்கள், கனவான்கள், கோடீஸ்வரர்கள், ஆள்பவர்கள் எல்லோருமே சிகரம் தொடும் வாழ்க்கையை எட்டிப் பிடிக்கின்றார்கள். ஆனால் எம் காலடியில் கோடிக்கணக்கான அடிமைகள் எம்மைத் தாங்கி நிற்கிறார்கள் என்பதனை நாம் அடியோடு மறந்து விடுகின்றோம். ஒவ்வொரு வீட்டினது வாசலிலும் கட்டி வைத்திருக்கும் குப்பையை, அதனை ஒழுங்காக எடுப்பவர் ஒரு மாதமாக எடுக்க வரவில்லையாயின் வீடு நாற்றம் எடுத்து அந்தச் சூழலையே அசிங்கம் செய்து ஆக்கிரமித்து விடும். அத்தொழிலாளி ஒவ்வொரு நாளும் வீடு வீடாய் வியர்த்துக் கொட்டி நீறு பூத்த உடம்புடன் வெயில், மழை, பஞ்சம், பசி, பட்டினி பாராது கஞ்சல், கழிவு, எச்சம், மிச்சம், மணம், அழுகல் எல்லாவற்றையும் கூட்டி அள்ளிக் கொட்டி வாசலைத் துப்புரவு செய்கிறான் என்றால் அவர்களை எப்போதாவது வாழ்த்திப் போற்றியிருக்கிறோமா? மே தினம்



யாருக்காகக் கொண்டாடப்படுகிறது? இவர்கள்போல மாடுகளாக உழைக்கும் மனிதர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் கொண்டாடப்படுகிறது. முக்கியமாக தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள், சுரங்கத் தொழிலாளிகள், கட்டடத் தொழிலாளிகள், கழிவகற்றும் தொழிலாளிகள், கல்லுடைக்கும் தொழிலாளிகள், காவல் தொழிலாளிகள், சுமை தூக்கும் தொழிலாளிகள், பண்ணைத் தொழிலாளிகள், மந்தைத் தொழிலாளிகள், அறுவடையாக்கும் தொழிலாளிகள், சவரத் தொழிலாளிகள், சலவைத் தொழிலாளிகள், அடுப்படித் தொழிலாளிகள், வீதித் தொழிலாளிகள் எனப் பல தரப்பட்டோர் அன்றும் இன்றும் என்றும் அடிமைகளாகவே அற்ப சொற்ப சலுகைகளோடும் மிகக் குறைந்த ஊதியத்தோடும் நீதி, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடாக, லீவு கோராமல் ஆறு, எட்டு, பத்து மணித்தியாலம் என நேர எல்லைகளுக்கப்பால் நித்திய சத்தியமோடு பத்தியமாகவும் பத்திரமாகவும் வேலை செய்கிறார்கள். இவர்களின் உரிமைகளுக்காகவே மே முதலாம் திகதி கொண் டாடப்படுகிறது. அதுவே மே தினம், தொழிலாளர் தினம், உழைப்பாளிகள் தினம் என்று இன்று உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது.



உலகின் சனத் தொகையானது 750 கோடியை எட்டிப்பிடிக்க இருக்கும் இத்

> **தொழிலாளர்களின் அபிலாஷைகளை மேம்படுத்தும் வகையில் ஒரு சட்ட மூலம் வரைவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். தொழிலாளர்களது உரிமை முழுவதுமாக வழங்கப்பட்டு, சலுகைகளையும் அவர்கள் அனுபவிக்க சட்டங்கள் துணைபுரிய வேண்டும்.**

தறுவாயில் நானூறு கோடி மக்கள் தொழிலாளர்களாகவே வாடி வதங்கி பகல் முழுவதுமாக தம்மை நாட்டுக்காகவே அர்ப்பணிக்கிறார்கள். இவர்களுக்கு எவராவது கண்ணீர் வடித்தாக இதுவரை எதுவித பதிவுகளும் இல்லை. ஆனால் அவர்களுக்குப் பின்னாலேயே நாம் பயணிக்கின்றோம்.

1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று சிக்காகோ நகரிலே தொழிலாளர்கள் எட்டுமணி நேரம் வேலை கேட்டு நடாத்திய மகத்தான வேலை நிறுத்தப் போராட்டத்தின் அடையாளமே இன்றைய மேதினப் போராட்டமாகி அவரவர் உரிமைகளுக்காகவே கொண்டாடப்படுகிறது. பெரும்பாலும் தொழிலாளர்கள் என்பார்கள் நாட்டுக்காகவும், வீட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றிவரும் நிலையில் வைத்து, இயற்கை வரம் ஈந்த போதும் சமூகமும் அது சார்ந்த தொழில் கொடுப்போரும் அவர்களை மூன்றாம் நிலையில் வைத்தே எடை போடுகிறார்கள். அவர்களுக்கான சுகாதார ஆரோக்கிய நலன் பேணும் விடயங்களிலும், அவர்களுடைய குடும்ப நலம், கல்வி, கலாசார, உணவு, உடை, நடை, பாவனை, உறையுள், ஊதிய சேமிப்பு மற்றும் பேறான விடயங்களில் எவருமே அதீத அக்கறை காட்டுவதில்லை.

உலகில் ஒரேயொரு நிறுவனம்தான் தன்னிடம் வேலை செய்து வரும் தொழிலாளிகளுக்கு நூற்றாண்டு போனஸாக ஒவ்வொருவருக்கும் கார் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கி கௌரவித்தமை மட்டுமே வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இதைவிட ஜப்பானில் டோக்கியோவில் இயங்கும் “கிரெஸி” இனடர் நாஷனல் என்ற நிறுவனம் தனது ஊழியர்களுக்கு ஒரு புதுவிதமான ஊக்குவிப்பை விளம்பரம் செய்து ஊழியர்களை உற்சாகப்படுத்தி வருகிறது. அடேயப்பா எப்படி என்றால் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ தொழிலாளர்களின் நல னில் பூரண அக்கறை காட்டுகிறது. அவரவர்க்குத் தினமும் ஓய்வு கட்டாயமாக்கப்படுகிறது.

✻ மேலும், கடின உழைப்பிலிருந்தும் நேரத்திலிருந்தும் தொழிலாளர்களை விடுவிக்க அயராது பாடுபடுகிறது.

இவற்றை விட தொழிலாளிகளுக்கு,

✻ சத்துள்ள உணவு நாள்தோறும் வழங்கப்படுகின்றது.

✻ ஒருபடி முன்னேறியதாய் ஒவ்வொருவரும் உற்பயிற்சி செய்வதற்குத் தூண்டப்படுகிறார்கள்.

✻ எல்லாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சிகரமான சூழலும் சுவாத்தியமும் குறையாதபடி மிகவும் அன்பாகக் கவனிக்கப்படுகிறார்கள்.

✻ இன்னுமொருபடியாக, தொழிலாளர்களின் மனோபாவம் ஈடேறும் பொருட்டு, மனோதைரியம் அதிகரிக்கும்படியாக, அனைவரையும் சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்கின்றனர்.

✻ விசேடமாக, ஒவ்வொரு ஊழியரும் இரவில் ஆறு மணி நேரம் தூங்கினால் அவர்களுக்குப் பரிசாகவும் பணமாகவும் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா (1,20,000/=) இனாமாக வழங்கப்படுகிறது.

அந்த நிறுவனம் போல ஏனைய நிறுவனங்களின் நிர்வாகங்கள் தமது ஊழியர்களுக்கு வழங்காமலிருப்பது உலகிலேயே பரவலாகவும் பரபரப்பாகவும் பேசு பொருளாகியுள்ளது. இந்நிலையில் முதலாளி வர்க்கமும், ஏகாதிபத்தியவாதிகளும் தொழிலாளிகளின் நன்மைகளையும் இலாபங்களையும் அபகரிக்க முயல்கின்றனர் என்ற கருத்துத் தவறாக இருக்க முடியாது.

உழைப்பாளிகளின் இரத்தம் எத்தனை தெய்வங்கள் சாட்சியாக இருந்தாலும் அவர்களது உடல்களில் இருந்து உழைப்பாகவும், வியர்வையாகவும் உறிஞ்சப்படுகிறது. பெரும் கல்விப்புலங்களில் இருப்பவர்கள் ஏன் உலக அரச ஜமீன்தாரர்கள் கூட அடிமைகளாக வாடி வதங்கும் உழைப்பாளிகளிடத்தே மே தினத்தைப் பெரும் பரிசுப்பொருளாக்கி ஓகோ என்று கொண்டாடுகிறார்களே தவிர, இன்றாவது அவர்களுக்கு ஏற்றவொரு உபகாரம், உதவிகள், வழிபாடுகள், வரங்கள், சந்தோஷங்கள் இயற்றுவதில்லை. இப்போக்கினால் மே தினத்தின் தாற்பரியம் பேணப்படவில்லை, மாறாக அவர்களிடமிருந்தே மேலும் கறக்கப்படுகிறது என்று கருத முடிகிறது.

மே தினத்திலாவது தோட்டத் தொழிலாளர்களின் பரிசாக ஆயிரம் ரூபா வேதனத்தை வழங்க வேண்டுமென்பதே எல்லோருடைய வேணவாவாகும்.

தற்பொழுது அவர்களின் அபிலாஷைகளை மேம்படுத்தும் வகையில் ஒரு சட்ட மூலம் வரைவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தொழிலாளர்களது உரிமை முழுவதுமாக வழங்கப்பட்டு, சலுகைகளையும் அவர்கள் அனுபவிக்க சட்டங்கள் துணைபுரிய வேண்டும். தொழிலாளர்களின் மந்திரமாக இப்பாடல் இரத்தத்தில் ஊடற வேண்டும்.

தொழிலாளர்களால் 1830, 1832, 1834, 1856, 1886,1887, 1895,1899 ஆகிய ஆண்டுகளில் பெரும் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டமையால் சம்பந்தப்பட்ட நாட்டு அரசுகள் தொழிலாளர் பக்கமாக அடி பணிந்து, அவர்களும் மனிதர்கள்தான் என்ற நிலைக்கு இரங்கி, இறங்கி, இளகி அவர்களது வேலை நேரம், உரிமைகள், ஆரோக்கியம், ஊதியம், ஓய்வூதியம் தொடர்பாக உரிய கரிசனை காட்டின.

**(11 ஆம் பக்கம் பார்க்க..)**

காலைக்கதிர் Kalaikkathir

## கொரோனா அபாய நிலைமை காரணமாக

# திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மே 3 முதல் இரு வாரங்களுக்குத் தடை



இலங்கையில் மே 3ஆம் திகதி முதல் திருமண நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வார காலத்துக்கு இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டின் கொரோனா அபாய நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மத வழிபாட்டு இடங்களில் கூட்டுச்செயற்பாடுகளை முன் னெடுப்பதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது என நேற்று மாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜூலை 14 வரை ஹரின் கைது செய்யப்படமாட்டார்

### உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தார் சட்டமா அதிபர்

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார் என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

தான் கைதுசெய்யப்படுவதைத் தடுக்கக் கோரி ஹரின் பெர்னாண்டோ எம்.பி. உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு உயர்நீதிமன்றத்தில் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜ ரான ஜனாதிபதி சட்டத்தரணி இதனைத் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

ஹரின் பெர்னாண்டோ கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது

# ரிஷாத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி கொழும்பில் எதிரணியினர் போராட்டம்!

### மக்கள் பலரும் பங்கேற்பு; அரசுக்கு எதிராகவும் கோஷம்




அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைத் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்து, அரசியல் நாடகத்தை அரங்கேற்றிக்கொண்டிருக்காமல், அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பாயிஸின் ஏற்பாட்டில் கொழும்பு, தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு அருகாமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், கொழும்பின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பங்கேற்றனர்.

ரிஷாத் பதியுதீனை விடுதலை செய், ரிஷாத்தை அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்காதே!, ரிஷாத்தை நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன?, யாரைத் திருப்திப் படுத்த இந்தக் கைது? போன்ற சுலோக அட்டைகளையும், நீளமான பதாதைகளையும் தாங்கியவாறு, சமூக இடைவெளிகளைப் பேணி இந்தப் போராட்டம் இடம்பெற்றது. அதேவேளை, இதன்போது ரிஷாத்தின் கைதுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டம் இடம்பெற்ற வேளை பொலிஸார் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, முஜிபுர் ரஹ்மான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த அர்ஷத் நிசாம்தீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களான பாயிஸ், தாஹிர், அன்சில், நௌபர் மற்றும் முக்கியஸ் தர்களான ரம்சி, நிஜாம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், சகோதர சமூகத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

### சட்டவிரோத மணல் ஏற்றல்:

## கடற்படையினர் துப்பாக்கிச் சூடு கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்

யாழ்., வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்குப் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும், கடத்தல்காரர்களின் மோட் டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

குடத்தனை வடக்குப் பகுதியில் கடற்படையினர் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியில் வந்த கன்ரர் ரக வாகனத்தை மறித்துள்ளனர்.

வாகனம் கடற்படையினரின் கட்டளையை மீறிச் சென்றபோது கடற்ப டையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதன்போது வாகனத் தில் பயணித்தவர்களும், வாகனத்துக்கு வழிகாட்டியாகச் சென்றார் எனச் சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஓட்டி ஒருவரும் தமது வாகனங்களைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அதையடுத்து கன்ரர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றைக் கடற்படையினர் மீட்டமையுடன், பருத்தித்துறைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினார்கள்.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வாகனங்களைப் பொறுப்பேற்றமையுடன் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

தப்பிச் சென்றவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# துறைமுக நகர சட்டமூலம் மீது புதன் விவாதம்

சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் எதிர்வரும் மே 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான விவாதம் மற்றும் அதன் மீதான வாக்கெடுப்பு என்பன எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறுமென நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தின் சில சரத்துகள் தேசிய பாதுகாப்பிற்கும் நாட்டின் இறையாண்மைக்கும் ஆபத்தாக உள்ளதாக கூறி, அதனை ரத்து செய்யுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் 19 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் அந்த மனுக்கள் மீதான விசாரணைகள் நடைபெற்ற நிறைவடைந்திருந்த நிலை யில் நாடாளுமன்றில் விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொத்தணியின் பெயர் மாற்றம்

இலங்கையில் புதிதாகக் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை 'புத்தாண்டு கொரோனா கொத்தணி' என்று பெயரிட அரச தகவல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி அரச தகவல் திணைக்களத்தால், நேற்று வியாழக்கிழமை மாலை வெளியிடப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த தகவல்களில், இந்தப் பெயர் முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மினுவாங் கொடை, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொத்தணி போன்ற பல்வேறு பெயர்களில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் கொரோனா உச்சம் நேற்று மாத்திரம் 832 பேர் அடையாளம்

### வைத்தியசாலைகளில் நிரம்பி வழியும் நோயாளர்கள்

மேல் மாகாணத்தில் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை யளிக்கும் வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்கள் அனைத்தும் நோயாளர்களால் நிறைந்துள்ளன என்று மாகாண சுகாதாரத்துறை செயலாளர் காமினி தர்மசேன தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமையில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் இடம் இல்லாததால் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில், நேற்று மாத்திரம் 1,531 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் 832 பேர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 533 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 145 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 145 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு வர்த்தகர்களின் அசௌகரியங்கள் அனைத்துக்கும் நிரந்தரத் தீர்வு வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்



வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் அனைத்துக்கும் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் நேற்று( வெள்ளிக்கிழமை)இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது, வடக்கு வர்த்தகர்களால் தன்னிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை வர்த்தக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற கடற்றொழில் அமைச்சர், இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, முன்னுரிமை அடிப்படையில் வடக்கு வர்த்தகர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களும் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்படும் என்று உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தடுப்பூசி தட்டுப்பாடு சுகாதாரத் தரப்பினர் அறிவிப்பு

இலங்கையில் முதலாம் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார அமைச்சிடம் தற்போது வரையில் 3 லட்சத்து 30 ஆயிரம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் மாத்திரமே இருக்கின்றன எனவும், மேலும் 6 லட்சம் தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் சுகாதாரத் தரப்பினர் கூறுகின்றனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு இந்தியாவின் தயாரிப்பான ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டியுள்ளது.

கடந்த் புதன்கிழமை தொடக்கம் இரண்டாம் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு ஆரம்பித்தாலும், தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்தியா ஏற்கனவே அனுப்பி வைத்த தடுப்பூசிகளில் 3 லட்சத்து 30 ஆயிரம் தடுப்பூசிகள் கைவசம் இருக்கின்ற நிலையில், மேலும் 6 லட்சம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், அவர்கள் மேலதிகமாக வழங்குவதாகத் தெரிவித்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட ஐந்து நாடுகளிடம் இருந்து ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளை எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி வரை ஏற்ற முடியும் எனவும், அதற்குள் அவசியமான தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவருக்கு இரண்டு தடுப்பூசிகளை ஏற்றுவதை விடவும் ஒருவருக்கு ஒரு தடுப்பூசியை ஏற்றி, சகலருக்கும் பாதுகாப்பு வழங்குவது இப்போதுள்ள நிலையில் ஆரோக்கியமானது எனத் தாம் கருதுகின்றேன் என இரா ஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்துள்ளார்.

# கஞ்சா போதைப் பொருளுடன் பருத்தித்துறையில் மூவர் கைது

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த மூவர் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை கடந்த (வியாழக்கிழமை) முன்னெடுத்தனர்.

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த 20, 31 மற்றும் 38 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து 6 கிலோ கிராம், 2 கிலோ கிராம் மற்றும் 500 கிராம் பொதி என 8 கிலோ 500 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோ, மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# வெளிநாட்டிலிருந்து வருகை தருவோர் தனிமைப்படுத்தல் காலத்தில் மாற்றம்

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தருகின்றவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை நீடிக்க யோசனைகள் உள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருகை தருகின்றவர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அடையாளம் காண்பதற்கு இது உதவும் என பொதுச் சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் எஸ்.எம். ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

'வெளிநாட்டிலிருந்து வருகை தருகின்ற மக்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும்.

நாங்கள் தற்போது அதற்கான வேலையே செய்கிறோம். தனிமைப்படுத்தல் காலத்தில் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பாதிக்கப்பட்ட நபரை அடையாளம் காண தேவையான நேரத்தை இதனூடாக பெறுவதே நோக்கமாகும்.

இதேவேளை சுகாதாரத்துறையினர் வெளியிட்டுள்ள கொவிட் கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பின்பற்றவில்லையெனின் பயணக் கட்டுப்பாடுகள் நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட வேண்டும்' என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## P2P வழக்கை முடிவுறுத்தியது .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேருக்கு எதிராகப் பொலிஸார் தொடுத்த வழக்கை திகதி குறிப்பிடாமலேயே தள்ளிப் போட்டு முடிவுறுத்தியது கல்முனை நீதிவான் நீதிமன்றம்.

கல்முனை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சம்சுடீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் மேற்படி உத்தரவை விடுத்தார்.

வழக்கின் எதிராளிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், த.கலையரசன், கோ.கருணாகரம் ( ஜனா), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட ஏழு பேரும் பிரசன்னமாகியிருந்தனர்.

கல்முனை நீதிமன்றுக்கு வந்து கொண்டிருக்கையில் விபத்தில் சிக்கிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் நேற்று முற்பகல் உரிய நேரத்தில்வந்து சேர்ந்தார்.

ஏற்கனவே இந்த வழக்குக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாம் பெற்றுக்கொண்ட இடைக்காலத் தடை உத்தரவை சுமந்திரன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக புதிய உத்தரவு எதனையும் கல்முனை நீதிவான் நீதிமன்றம் வழங்கக் கூடாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை தெரிந்ததே.

மேற்படி இடைக்கால உத்தவைப் பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சுமந்திரனினால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனுவில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிவான் மற்றும் தற்போதைய நீதிவான் ஆகியோரின் பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி ஏழு பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணை விடுத்தவர் தாம் அல்லர் என்றும், பதில் நீதிவான் ஒருவரே என்றும் நீதிவான் சம்சுடீன் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தரணி சுமந்திரன், எனினும் தடையீட்டு ரிட் ஆணை ஒன்று ஒரு நீதிமன்றத்துக்கு எதிராக அல்ல, அதன் நீதிபதிக்கு எதிராகவே பெயர் குறிப்பிட்டுப் பெற முடியும் என்பதாலும், அத்தகைய மனுவை பதில் நீதிவானுக்கு எதிராகத் தொடர முடியாது என்பதாலும் தற்போது பதவியில் உள்ள நீதிவானின் பெயர் ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டது என்று விளக்கமளித்தார்.

இப்படி கல்முனை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டமைக்கு பொலிஸாரை நேற்றுக் கடிந்து கொண்டார் நீதிவான்.

இவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டமைக்கான அறிவுறுத்தல் எப்படி வந்தது என்று நீதிவான் பொலிஸாரை வினாவினார். மேலிடத்தில் இருந்து வந்த வழிகாட்டுதல் என்று பொலிஸார் பதிலளித்தனர்.

மேலிடத்தில் இருந்து உரிய ஆலோசனை பெறாமல் தாங்கள் வழக்கை விலக்கிக் கொள்ள முடியாது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதனையடுத்து வழக்குக்குப் புதிய திகதி ஏதும் குறிப்பிடாமல் அதனைத் தள்ளிப் போட்டு விடயத்தை முடிவுறுத்தினார் நீதிவான். நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தொடரும் முயற்சி எதனையும் பொலிஸ் தரப்பு மீள ஆரம்பிக்குமானால் இந்த விடயத்தை மீளவும் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குத் தாம் கொண்டு செல்வார் என மனுதாரர் தரப்பு சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த விவகாரம் திரும்பவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது கல்முனை நீதிவான் நீதிமன்றத்தின் இன்றைய முடிவை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு ரிட் மனுவின் மனு தாரரர் சட்டத்தரணி சுமந்திரன் கொண்டு வருவார் எனவும் கூறப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை மீள ஆரம்பிக்க பொலிஸார் முயற்சிக்காத வரையில் மேற்படி ரிட் மனுவையும் தாம் இடைநிறுத்தி விலக்கிக்கொள்ள விரும்புகின்றார் என அவர் மேன்முறையீட்டு மன்றுக்குத் தெரிவித்து, அங்கும் இவ்வழக்கை முடிவுக்குக் கொண்டுவர அவர் நடவடிக்கை எடுப்பார் என்றும்


# உழைப்பவர்களுக்கே...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாகவே உலகமும் விழிப்படைந்தது. போராட்ட அலை எங்கும் பரவியது. தடுக்க முடிய வில்லை.

1830 பிரான்ஸ் எழுச்சி, 1834 பாரிஸ் எழுச்சி, 1832 பொஸ்டன், அமெரிக்கா போராட்டம், 1835 பென்சில்வேனியா எழுச்சி, 1856 மெல்போன் போராட்டம், 1886 அமெரிக்கா போராட்டம், 1887 அமெரிக்காவில் 5 லட்சம் பேர் போராட்டம், 1889 பாரிஸ் இல் சோசலிசத் தொழிலாளர், 1895 – 1899 இல் ரஷ்யா தொழிலாளர்கள் தீர்மானம் என்றவாறு லெனின், கார்ல் மார்க்ஸினது 8 மணித்தியால வேலை என்ற வாதமே தொழிலாளர்களை உயிர் பிழைக்கச் செய்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஆபிரிக்கா, அரபு நாடுகள் என உழைப்பாளிகள் தற்போது ஏதோ கவனிக்கப்படுகிறார்கள். இலங் கையில் தற்போது மே தினம் வெல்லப்படுகிறது. 1923 இல் இந்தியாவிலே சிங்காரவேலர் என்பவரால் சென்னை மாநகரில் முதன்முதலாக மே தினம் கொண்டாடப்பட்டதன் எதிரொலியாக இலங்கையிலும் தொழிலாளர் தினம் வலுப்பெற்று இன்றுவரை வெல்லப்பட்டு வருகின்றது. அவர்களை – தொழிலாளர்களை – இன்று வாழ்த்துவோம். போற்றுவோம். இது அவர்களின் பூமியடா!

## சுமந்திரன் எம்.பி. பயணித்த வாகனம் ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் நேற்று அதிகாலை கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை யானபேரணி தொடர்பான வழக்கு நடவடிக்கைகளுக்காக கல்முனை நோக்கிச் சுமந்திரன் எம்.பி. பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கடும் மழையுடனான காலநிலையால் சுமந்திரன் எம்.பி. பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அதிவேக வீதியின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் வாகனத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும், தனக்கு எந்தவித பாதிப்பு ஏற்படவில்லை என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். இந்த விபத்தைத் தொடர்ந்து வேறு வாகனத்தில் சுமந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# சவால்களை தகர்த்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை பிரதமர் மஹிந்த ஏற்க வேண்டும்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் 'அட்வைஸ்'

அமைச்சரவை அமைச்சர்கள் நாட்டை பழிகொடுத்தாவது தங்களின் அமைச்சுப் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வார்கள். கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் நாடு பாரிய விளைவுகளை எதிர்க்கொள்ள நேரிடும் ஆகவே, இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

கொவிட் – 19 தாக்கத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொண்டு நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை பிரதமர் ஏற்க வேண்டும். அரச சேவை முழுமையாக பலவீனமடைந்துள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் அரசும் பலவீனமடையும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் முதலாம் அலை தாக்கத்தின் போது அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டது. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் முறையாகப் பின்பற்றினார்கள். இதன் காரணமாக நெருக்கடி நிலையை அப்போது வெற்றிகொள்ள முடிந்தது. ஆனால் தற்போது அவ்வாறு கிடையாது.

கொவிட் – 19 வைரஸ் தொடர்பாக சுகாதார அமைச்சு பொறுப்புடன் செயற்படவில்லை. கொவிட் – 19 வைரஸ் சாதாரண ஒரு தடிமன் என்று நாட்டு மக்கள் அலட்சியப்படுத்தும் அளவிற்கு சுகாதார அமைச்சு பொறுப்பற்ற தன்மையில் செயற்பட்டது. வைரஸின் தாக்கம் குறித்தும், முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் எவ்வித திட்டங்களும் வகுக்கப்படவில்லை.


புத்தாண்டு காலத்துக்குப் பிறகு கொவிட் – 19 வைரஸ் தொற்றின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. சுகாதார அமைச்சின் பலவீனத்தன்மை கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையின் ஊடாக வெளிப்பட்டு விட்டது.

அரச நிர்வாகம் பலவீனமடைந்துள்ளது. கிராமத்தில் உள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்துவது சிறந்தது. அவ்வாறே அரசசேவை தொடர்பாகவும், அமைச்சர்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. இவர்கள் அனைவரும் நாட்டைப் பலி கொடுத்தாவது தங்களின் அமைச்சுப் பதவிகளைப் பாதுகாக்க முயற்சிப்பார்கள்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூரமான நிலை தொடர்பாக அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்பதை அவர்களின் செயற்பாடுகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கம் தொடர்பாக அதிக அவதானம் செலுத்த வேண்டும். இந்தியாவின் தற்போதைய நிலைமை அபாயகரமானது. ஏற்பட்டுள்ள



சவால்கள் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

கொவிட் – 19 விவகாரம் தொடர்பிலான அனைத்து பொறுப்புக்களையும் ஜனாதிபதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்க வேண்டும். நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு மாத்திரம் உண்டு.

நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டையும், மக்களையும் அவர் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு முழுமையாக உள்ளது.– என்றார்.

## 25 வயதான இளைஞன் ஒருவருக்கு மேல் நீதிமன்றால் ஆயுள் தண்டனை

4.58 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட இளைஞனுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

மகரகமை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான இளைஞனுக்கு இந்த ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் மகரகமை பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலில் இந்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து போதைப் பொருளை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டில் சட்டமா அதிபர், சந்தேக நபருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர், தீர்ப்பை வழங்கிய நீதிபதி, குற்றவாளிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளிப்பதாகவும் நீதிபதி கூறியுள்ளார்.

## கொரோனா அபாய நிலைக்கு மத்தியிலும் வெசாக் ஏற்பாடுகள் நயினாதீவில் தீவிரம்

தேசிய வெசாக் கொண்டாட்டம் இம்முறை நயினாதீவில் இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் நயினாதீவு ரஜமகா விகாரையில் இடம்பெற்றுள்ளது. நாட்டில் கொவிட் பரவல் அதிகரித்துள்ள நிலையில் மே மாதம் 31ஆம் திகதி வரையில் நிகழ்வுகள், கொண்டாட்டங்களுக்கு மட்டுப்பாடுகள் விதித்து சுகாதார அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது.

இதேவேளை ஆலயத் தேர்த் திருவிழாவில் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவித்து ஆலய நிர்வாகிகள் கைதாகிப் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு சூழலில் எதிர்வரும் மே மாதம் இறுதி வாரத்தில் தேசிய வெசாக் கொண்டாட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் மற்றும் மாவட்ட செயலர் க.மகேசன் ஆகியோரின் பங்கேற்புடன் ரஜமகா விகாரையில் கூட்டம் நடைபெற்றுள்ளது.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org